# சாளரம்

ஜனவரி 1992

விலை 12 ரூபா



இளையோர் திங்கள் இதழ்

## 'பகலவன்' பதில்கள்

வாசகர்களின் கேள்விகளுக்கு 'சாளர'த்தினூடாக 'பகலவன்' பதிலளிக்கவுள்ளார். கல்வி சம்பந்தப்பட்ட மற்றும் பொதுவான கேள்விகளை சாளரத்திற்கு எழுதி அனுப்பிவையுங்கள் பதில் தரப்படும்.

'சாளரம்'
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

## உள்ளே...

- ☐ ஐக்கிய நாடுகள் அமைப்பை வல்லரசு நாடுகள் தமது கைப்பொம்மையாக கையாளுகின்றன
- ☐ சோறும் சுதந்திரமும்
- ☐ இருளில் ஒளி
- ☐ நுண்ணறிவுப் போட்டி - 3 பதில்கள்
- ☐ தலைமைபற்றி ஒரு சமூக உளவியல் பார்வை
- ☐ கூடைப்பந்தாட்டம்
- ☐ பாரம்பரிய வைத்தியமுறையின் இன்றைய அவசியம்
- ☐ அறிவியல் உண்மைகள்
- ☐ திலாமுற்றம்
- ☐ பாரதி நினைவாக...
- ☐ உழவின் உதயம்
- ☐ தென்னிலங்கை அரசியல் மாற்றமும் இனப்பிரச்சினையும்
- ☐ போரும் அதன் சமூக பயன்பாடும்
- ☐ நுண்ணறிவுப் போட்டி
- ☐ தெறிப்பு
- ☐ ஆசிரியர் தலையங்கம்
- ☐ செய்திப் பதிவுகள்

# ஐக்கிய நாடுகள் அமைப்பை வல்லரசு நாடுகள் தமது கைப்பொம்மையாக கையாளுகின்றன

ஈராக்கில் அங்குள்ள குர்திஷ் இன மக்கள் விடயத்தில் வல்லரசுகள் மேற்கொண்ட சில நடவடிக்கைகள் வெளிக்கொணரப் பட்டதை அடுத்தும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் புனர்வாழ்வு உதவி நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட வல்லரசு நாடுகளுடன் அவற்றின் சுயநல நோக்கத்திட்டங்களுடன் கூட்டாக இணைந்து பணியாற்ற மறுப்புத் தெரிவித்ததை அடுத்தும் இந்த நாடுகள் ஐ. நா. புனர்வாழ்வு அமைப்பின் மீது பெரும் ஆத்திரம கொணடுள்ளன.

ஆந்திரம் கொண்டுள்ள அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி ஆகிய இந்த வல்லரசு நாடுகள் ஐக்கிய நாடுகள் அமைப்பின் புனர்வாழ்வுப் பணி அதிகாரிகள் புதிதாக நியமிக்கப்படுவதையே தாம் விரும்புவதாக தெரிவித்து தீர்மானமும் எடுத்துள்ளன.

ஜேர்மனியின் ஹேல் நகரத்தில் கூடிய இந்த நாடுகளின் மாநாட்டில் பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சர் டக்ளஸ் ஹேட்டும் ஜேர்மனியின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஹான்ஸ் டியெஸ்ரிச் ஹென்சரும் ஐக்கிய நாடுகள் புனர்வாழ்வுப்பணி இணைப்பதிகாரி ஒருவர் புதிதாக நியமிக்கப்பட வேண்டுமென முன்மொழிந்துள்ளனர்.

தமது இந்தப் பிரேரணைமீது அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், 'இந்தப் புதிய அதிகாரி நேரடியாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துக்குக் கீழ் புணியாற்ற வேண்டும் எனவும். அத்துடன் ஐக்கிய நாடுகளின இறைமைகளின் கீழுள்ள எல்லா நிவாரண நடவடிக்கைகளையும் மற்றும் புனர்வாழ்வு நிவாரண நிறுவனங்களின் நடவடிக்கைகளையும் கவனிக்கும் இணைப்பதிகாரியாக இவர் தமது பணியளவில் இயங்குவார் எனவும் தெரிவித்துள்ளனர்.

வளைகுடா யுத்தக் கெடுபிடியால் அங்கிருந்து அலை அலையாக வெளியேறும் அகதிகள் பிரச்சினையில் சர்வதேச நிவாரண நிறுவனங்களின் தன்னிச்சையான போக்கை கட்டுப்படுத்தவேண்டிய அவசியத்தைக் கருத்திற்கொண்டே தாம் இத்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர்கள் விளக்கியுள்ளனர்.

மேலோட்டமாகப் பார்த்த போது நிறுவனம் செயல்திறனுடன் இயங்கவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டதுபோலவே இந்த ஆலோசனை தொனித்தது, எனினும் இதற்குள் இருந்த அந்தரங்கத்தை வாஷிங்டன் வெளியில் விட்டு விட்டது.

''குர்திஷ் அகதிகளின் புகலிடங்கள் பற்றிய விடயம் விவாதத்திக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது நடந்ததைப்போல இன்னொரு முறையும் நடந்து விடக் கூடாது. அதாவது ''அமெரிக்காவின் அரசியல் இராணுவ நோக்கங்களுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிவாரண நிறுவனங்கள் குழி பறிக்கமாட்டா என்று நிச்சயப் படுத்திக் கொள்வதே அமெரிக்காவின் திட்டம்'' இவ்வாறு பிரிட்டிஸ் 'இன்டிபென்டன்' நாளோடு எடுத்து எழுதக்கூடியதாக அமெரிக்காவிடயத்தை வெளிப்படுத்திவிட்டது.

ஐக்கிய நாடுகளின் அங்கமான நிவாரணப்பணி நிறுவனங்களின் செயல்பாட்டு சுதந்திரத்தை வெட்டி வீழ்த்திவிடவே இந்த சர்வதேச ஏகாதிபத்திய வாதிகள் விரும்புகிறார்கள். அந்த நிறுவனங்களின் சுதந்திரமான நடவடிக்கைகளை முற்றாக கட்டுப்படுத்தி வல்லரசுகள் தமது நோக்கங்களை சாதிக்க வாய்ப்பாகவே ஐ. நா அகதிகள் நிவாரண நிறுவனத்துக்கு உயர்நிலை அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவேண்டுமென முன்மொழிந்துள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி ஆகிய இந்த நாடுகளின் இராணுவ உள்நோக்கங்களுக்கு குந்தகம் ஏற்படுத்தாத செயற்திட்டங்களே மட்டும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிவாரண நிறுவனங்கள் மேற்கொள்ளக் கூடியதாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கோருவது வியப்பாக இருக்கிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு சர்வதேச ஏகாதிபத்திய வாதிகளின் ஆதிக்கத்தினுள் கொண்டுவரப்படுகிறது. அல்லது அவற்றின் ஆதிக்கத்தின் கீழ்தான் இப்பொழுதும் இருக்கிறதுஎன்பதுதான் இதன்பொருள். வல்லரசுகளின் இந்தப் பிரேரணையானது ஐ. நாவை நாற்றமடிக்க வைத்துள்ளது; வேகமாக வெறுக்கவும் செய்துள்ளது.

ஐ. நா. மன்றும் இதன் ஆரம்ப அமைப்பான 'லீக் ஓப் நேஷன்ஸ்' அமைப்பை தானும் பின் பற்றி தடம் புரளப்போவதாக இப்பொழுது அச்சுறுத்துகிறது போலும். உலகெங்குமுள்ள மக்கள் இந்த 'லீக் ஓப் நேஷன்ஸ்' சாதிக்கவேண்டுமென எதிர்பார்த்த அந்த சமாதானத்தை அதனால் சாதிக்கமுடியவில்லை. □

உலகத்தில் யுத்தமேகங்கள் இடியாக இடித்து வெடித்து முழங்கியபோது ஏகாதிபத்திய வாதிகளின் பிடிக்குள் அகப்பட்டுக்கொண்ட இந்த அமைப்பு பழிப்புக் குரிய நிலையில் குலைந்து கொட்டியது.

ஆரம்பகாலங்களில் பலநாடுகள் காலனித்துவ அடக்கு முறைகளை உடைத்துக் கொண்டு தமது நாட்டினக் கட்டமைப்பு ஆளுமையுடன் எழுந்தபோது ஐ. நா. அமைப்பானது இந்த நாடுகளை அங்கீகரித்து தனது பார்வையுள் வைத்து கட்டிவளர்த்து வந்துள்ளது. இவ்வாறான இதன் பங்கு பணிகளால் ஐ. நா. அமைப்பு செழுமையும் செல்வாக்கும் பெற்றது.

கொரியா மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பில் ஐ. நாவின் இரகசிய ஒத்துழைப்பு மற்றும் வியட்னாம் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பில் வெளிப்படையாக தனது நிலைப்பாட்டைக் காட்டத்தவறியமை ஆகிய விடயங்கள் இதன் குறைபாடுகளாகக் கொள்ளப்பட்டாலும் சர்வதேச விவகாரங்களைப் பொறுத்தவரை ஐ. நா. இன்னும் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை மறுத்துவிடமுடியாது.

எனினும் இரு அதிவல்லரசுகள் மீதான தமது அதிருப்தியை மூன்றாம் உலகநாடுகள் வெளிப்படுத்த வாய்ப்பளிக்கும் மன்றமாக ஐ.நா. பயன்பட்டு வந்திருக்கிறது. ஆயுதக் களைவுக்கு அழைப்பு விடுப்பதும், இன ஒதுக்கலுக்கு எதிராகக் குரல் கொடுப்பதும், உலக சுகாதாரம் இன்னும் சர்வதேச ரீதியாக அழிவு அவலங்களைப்பற்றி அக்கறை கொள்வதும், சர்வதேச கடன் கெடுபிடிகளுக்கெதிரான அபிவிருத்தி நடவடிக்கையாக புதிய பொருளாளதார முறைகளை மேம்படுத்தல் ஆகிய விடயங்களும் இதன் நல்ல அம்சங்களாக விளங்குகின்றன.

நாடுகளின் சமூக அமைப்பு முறைகள் எவ்வாறு இருந்தாலும் இந்த நாடுகளின் தன்னாதிக்கத்தை மதித்துப்பேணுவதும், நாடுகளின் உரிமைகளைப் பாதுகாப்பதுமே ஐ. நாவின் தொடர்ச்சியான பாத்திரத்தின் உத்தரவாதமாகும்.

இதற்கு மாறாக

இப்பொழுது அமெரிக்காவும் ஏகாதிபத்திய வாதமும் ஐ. நாவை அழிப்பதற்கான அச்சுறுத்தலாக எழுந்துள்ளன.

## ஐ. நாவின் அவசியத்துக்கான நியாயங்களுக்கு அச்சுறுத்தல்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிறுவனங்களை உலகின் பெரும் முதலாளித்துவ நாடுகள் சில தமது அரசியல் இராணுவ நோக்கங்களை சாதிக்கக் கூடிய சாதனங்களாக வைத்துக் கொள்ள முனைப்புக் கொண்டுள்ளன. அந்த வகையில் ஐ.நாவை தமது அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்து இயங்க வைக்க வகை செய்யும் மேற்கூறிய பிரேரணைகள் ஐ நா. தொடர்ந்து இயங்கவேண்டுமென்ற நியாயத்துக்கு முற்றுமுழுதாக மாறானதாகும்.

ஏகாதிபத்தியத்தின் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், சூறையாடல்கள் மற்றும் நாசங்களிலிருந்து விடுதலை பெறவும் அபிவிருத்தி அடையவும் இறைமை, சுதந்திரம், சமாதானம் ஆகியவற்றை அடையவும் அவாவி நிற்கும் நாடுகளுடனும் அங்குள்ள மக்களின் அபிலாசைகளுடனும் இந்த ஏகாதிபத்தியப் பிரேரணைகள் மோதிமுரண்படுகின்றன. □

— ''வான்கார்ட்'' இதழில் வெளியான கட்டுரை-
தமிழாக்கம்
**எஸ். எம். எஸ்.**

## தட்டச்சு யந்திரம்

அலுவலகங்களில் தட்டச்சு யந்திரங்களைக் காண்கிறோம். அலுவலக வேலைக்கு அவை அத்தியாவசிய தேவை. இன்று பல தொழிற்சாலைகளில் பல வியாபாரப் பெயர்களில் தட்டச்சு யந்திரங்கள் தயாரிக்கப் படுகின்றன.

தட்டச்சிடுவதற்காக 1829 ம் ஆண்டு அமெரிக்காவில் ஒரு யந்திரம் தயாரிக்கப்பட்டது. அதை 'Typo-Grapher' என அழைத்தனர். தொடர்ந்து முன்னையதிலும் பார்க்கச் சிறப்பான முறையில் பல யந்திரங்கள் தயாரிக்கப் பட்டன. எனினும் அவை ஏதோவொரு விதத்தில் குறைபாடுடையனவாகவே இருந்தன.

தற்போது பாவனையிலிருக்கும் தட்டச்சு யந்திரத்தைப் போன்ற முதலாவது தட்டச்சு யந்திரம் 'கிறிஸ்தோபர் லாதெம் ஷோல்ஸ்' என்ற அமெரிக்கரால் 1867 ம் ஆண்டு தயாரிக்கப்பட்டது, அதை விற்பனைக்காகத் தயாரிக்கும் உரிமையை நியூ யோர்க்கிலிருந்த ஈ.றெமிங்ரன் அன் கம்பனி 1873 ம் ஆண்டு வாங்கியது.

முதலாவது தொகுதி தட்டச்சு யந்திரங்கள் 'றெமிங்ரன்' என்ற வியாபாரப் பெயரில் 1875 ம் ஆண்டு சந்தைக்கு வந்தன.



# சோறும் சுதந்திரமும்

– ஜோசப் பாலா –

நகரம் கலகலப்பாக இருந்தது. எல்லோரும் ஏதோ அவசர அவசரமாக தமது கடமைகளை கவனித்த வண்ணம் செல்லுகையில், தேவன் மட்டும் தனது வீட்டின் கடிதமொன்றை படிப்பதற்காக தேனீர் கடையின் ஒதுக்குப் புறத்தை நாடினான்.

அவனது வீட்டார் யாவரும் கொழும்பு சென்று சொற்ப நாட்கள்தான். அங்குள்ள நிலைகளையும், அவர்களின் மன ஆதங்கத்தையும் எழுத்துருவில் தேவனிற்குக் கொடுத்தனுப்பி இருந்தார்கள். அந்தக் கடிதம் பல சோதனைகளைத் தாண்டி அவன் கைக்கு எட்டியதும் ஒரு சாதனைதான்!

சிறுகதை

ஊரடங்கு அறிவிப்போடு பயண நெருக்கடிகளைத் தாண்டி யாரும் கடிதம் வேண்டிவரத் தயங்குவதால் எதனையும் உடன் அறிய முடியாது தயங்கும் உள்ளங்களுடன் தேவனும் ஒருவனாக ஏங்கி இருந்தான்.

ஊரடங்கு உத்தரவுக்குள்ளும் யாழ்நகரம் தனது அன்றாட நிகழ்வுகளைக் கண்டு கொண்டே இருப்பது காலம் அறிந்தகதையாகி விட்டது. புறப்பட்டு ஒருவாரம் கடந்து வந்த ஒருவரின் வருகை தான் அவனுக்கு நகரில்கிடைத்த அந்தக் கடிதம். உடன் படித்திடவேண்டும் என்ற ஆவல் அவனை அறியாமலே அவசரப்படுத்தியது.

தேநீர் கடையில் பலரும் முண்டியடித்துக் காலை உணவை ருசிபார்த்திருக்க தேவனும் வடை, தேநீர் என சொல்லிவிட்டு தன் உறவை தரிசிக்க அந்தக்கடிதத்தைப் பிரித்தான். 'வள், வள்' என்ற சத்தமும், எச்சிலை போடுபவர்களின் முண்டியடிப்பும், அவன் இருக்கும் இருக்கைப் பக்கமாகவே இருந்ததால் அச்சூழல் அவனுக்கு அமைதியைத் தரவில்லை. இருந்தும் தினமும் உணவுக்காக வந்து பழக்கப்பட்டு விட்டதால் பொறுத்துக் கொண்டு எட்டிப் பார்த்தான். தெரு நாய்கள் ஏதோ முண்டியடித்து போடுவதை எல்லாம் போட்டி போட்டு கிளறுவதிலும், மெலிந்தோரை

வலியோர் வதைப்பது போல வும், தமது பலப்பரீட்சைக்கு நல்ல களமாக பயன்படுத்திக் கொண்டு இருந்தன.

தோசை, இட்லி, இடியப் பம், சுவையூட்டும் தின்பண் டங்களின்எச்சிலைகள் யாவும் அந்நாய்கள் மேல் விழுந்து சிதறுவது போட்டிக்கு விறு விறுவிறுப்பைக் கொடுத்தது. அந்த நிகழ்வுகளை ஒருகணம் நிறுத்தி கடிதத்தில் கவனம் செலுத்தியபோது அவனுக் கான தேனீரும், வடையும் மேசைக்கு வந்தது. கடிதத் தைப் பிரித்துக் கொண்டே தேனீரையும் சுவைத்துக் கொண்டான்.

'அன்பு மகன் தேவன்,

உன்னைப் பிரிந்து நாங்கள் வந்தது கவலைதான். வெகு விரைவில் நீயும் வந்திட வேணும் என்பதே எமது ஆவல். இங்கு அன்றி வீட்ட இருந்து நாம் வெளியில் செல் வது மிகவும் குறைவு. இங்கு சாப்பாட்டுக்குகுறைவில்லை. எதைச் சாப்பிடுவது எதை விடுவது என்று தெரியாது இங்கு நாம் திணறுகிறோம். அங்கு உன்னை நினைக்கை யில்தான் கவலையாக உள் ளது. இங்கு வீட்டுக்குள்ளே தான் எல்லோர் பொழுதும் செல்கிறது. T. V., றேடியோ, பேப்பர்களில் அங்குள்ள நிலைமைகளை அறிகிறோம். வேறு யாரையும் சந்திக்க முடிவதில்லை. காரணம், எவ ரும் இப்போ இங்கு வெளி யில் செல்வதில்லை. பலத்த சோதனை. வீட்டில் எமக்கு எதுவித குறையும் இல்லை. நீதான் அங்கு ஊரை சுற்றி வருவாயே ஏதும் செய்திகள் இருந்தால் எழுது. முடிந்தால் நீயும் வந்து இங்கு இருக்க லாம். ஆனால் அங்கு போல் சுத்தித்திரியத்தான் முடி யாது,

அம்மாவின் கடிதத்துடன் தங்கை சுமதியும் எழுதி இருந்தாள்.

'அன்பின் அண்ணா:-

படிக்க எண்டு வந் தோம். படும்பாடு! தின்ப தும், குடிப்பதும் தான் வாழ்க்கை. இங்கு வேறு எது வும் செய்ய முடியாது வீதியில் சென்றாலும்,விசாரணை என் பதால் நாமோசிறை வாழ்க் கையில் தான் இருக்கிறோம். இங்கு அடிமை வாழ்வை தான் படிக்கிறேன். இதை உணர்ந்தால் நீ வரலாம். அடக்கப்பட்டு, அடைக் கப்பட்ட வாழ்க்கையைவிட அங்கு வரவேண்டும் போலுள்ளது. இருக்கும் வீட் டாரிற்கும் எம்மால் சிரமம் கொடுத்து எத்தனை காலம் தான் இப்படி வாழ்வது. எமது வாழ்வில் எத்தனை காலம் வாழ்ந்தோம் என்பது முக்கியமல்ல எப்படி வாழ்ந் தோம் என்பதுதானே முக் கியம். 'சுதந்திரம் இங்கு சோத்துக்குத்தானா' என எண்ணி வேதனைப்படுகி றேன். இதைவிட அங்குள்ள நெருக்கடி பெரிதல்ல. அதில் ஓர் சுகமும் உண்டு. நாமும் பங்களித்தோம் என்ற மன நிறைவும் உண்டு அல்லவா. அங்குவர ஆவலாய் உள்ளது

உன் தங்கை
சுமதி,

கடிதத்தில் மூழ்கியிருந்த தேவனிற்கு கடைக்காரனின் பில் அவனை மீண்டும் இருக் கும் இடத்தை ஞாபகப்படுத் தியது. 'அடடா என்ன சத் தம் நாய்கள் தொல்லையாய் இருக்கிறதே' என்று சத்தம் வந்த திசையை நோக்கியவ னிற்கு ஓர் உண்மை புலப்பட் டது. எச்சிலைக்கு போட்டி போட்ட தெரு நாய்கள் யா வையும் கூட்டிற்குள் தள்ளிக் கொண்டிருந்த நாய் பிடிகா ரனின் தோற்றத்தைப் பார்த் தான். கொழும்பிலும் இதே கதிதானா என. எம்மவரை ஒரு கணம் நினைக்கையில் தேவனின் கண்கள் பனித்தன. □

✻ உருவகம்

# இருளில் ஒளி

–வளலாய் ரஞ்சன்

எத்தனையோ கோடி கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பாலிருக்கும் சூரிய மண்டலத்திலிருந்து மிக வேகமாக பயணித்துக் கொண்டிருந்த ஒளிக்கற்றைகளுக்கு தமது பயணத்திற்குக் குறுக்கே சுதந்திரச் சவாரியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மென்தூசித் துணிக்கைகளின் செயல் ஆத்திர முட்டியது.

" ஏ தூசிப்படலங்களே ...! எமது வரவை உங்களால் புரிய முடியவில்லையா ...? ஏன்தான் எமக்குக் குறுக்கே நின்று இடைஞ்சல் செய்கிறீர்கள் ...? ஏதோ பெறுமதியானவர்கள் என்ற நினைப்பில் ... ''

ஆவேச மேலீட்டால் பொரிந்து தள்ளியது ஓர் ஒளிக்கற்றை. அந்தர வெளியில் உல்லாசமாக அசைந்து கொண்டிருந்த தூசிகளுக்கு சற்றும் எதிர்பாராத இந்தப் பேச்சு அதிர்ச்சியாக இருந்தது. ''என்ன ...? ஆணவப் பேச்சு... நாங்கள் எமது வெளியில் சுதந்திரமாகப் பறந்து கொண்டிருக்கிறோம்.!... எமது சுதந்திர இயக்கத்தைப் பறித்து எமது பகுதிக்குள் அத்துமீறி உட்புகுந்து விட்டு வீராப்பும் வேறு பேசுகிறீர்களா ...? '' இப்படி இடி போல முழங்கியது ஒரு துணிக்கை.

''என்ன ...? இப்பகுதி உங்களுடையதா வெளியெங்கும் சுதந்திரமாகச் சஞ்சரிக்கும் உரிமை எங்களுக்கன்றோ உரியது ... அற்ப தூசிகளான உங்களுக்கு எம்மோடு பேசும் தகுதிகூட இல்லையே ...'' ஒளிக்கற்றையின் குரல் கர்வத்தில் குழைந்தது. ''அப்படியா ... நீங்கள் தான் உயர்ந்தவர்கள் என்ற தலைக்கனமோ...? நீங்கள் ஒளிக்கற்றைகளாக இருந்தும் அறியாமை இருளில் இன்னமும் மூழ்கியபடியே இருக்கிறீர்கள் ... எம் போன்ற எண்ணிலடங்கா தோழர்களின் தியாகம் தானே உங்களைக் கூடப் பிரசவிப்பதை நீங்கள் உணரவில்லையா...? ''

'' என்ன ... ? ''

'' ஆமாம் ... ! எம் போன்ற தூசிகளின் அணுக்களின் சேர்க்கையால் தானே உங்கள் பிறப்பிடமான சூரியன் முதலான கிரகங்கள் கூட உருவாக்கப்பட்டுள்ளன ... ''

''புதுமையான பேச்சு ...'' ''உங்களால் புரிந்து கொள்ள முடியாத பழமை ... ஆனால் உண்மை. ஒளியென்று உங்களை பூவுலக மக்கள் போற்றுவதற்குக் கூட நாமே காரணம். மக்கள் மாத்திரமன்றி அனைத்து உயிர்களுமே எம்மினத்தவரின் கூட்டு வடிவமே.'' ஒரு அறிவியல் பிரசங்கம் நிகழ்த்திய துணிக்கை ஓய்வெடுத்துக் கொண்டது. ஒளிக்கற்றைகளுக்குக் குழப்பமாக விருந்தது. ''என்ன ... நீ சொல்வதெல்லாம் 'உண்மைதானா...?'' அனைத்து ஒளிக்கற்றைகளுமே இடிப்பிரவாகம் போல ஆவலாகக் கேட்டன. மீண்டும் அந்தத் தூசி பேசியது. ''மாபெரும் உண்மை ... பரந்த இந்தப் பிரபஞ்ச வெளியில் இடத்தை அடைக்கும் தன்மை எம்போன்ற துணிக்கைகளால் ஆக்கப்பட்ட திண்மங்களுக்கே உரியது. நாம் இல்லையேல் ஒளி மாத்திரமன்றி எதுவுமே அற்ற இருட் கடலாகவே பரந்த வெளி இருக்கும்...''

மேலும் அவ்விடத்தில் நிலை கொள்ளாது அந்தத் தூசிப் படலமே அவ்வெளியை விட்டு அகன்றது.

'' நில்லுங்கள் தூசித் துணிக்கைகளே...! உங்களால் மாபெரும் உண்மைகளை உணர்ந்து விட்டோம் ... இப்போது தான் நாங்கள் அறியாமை இருளற்ற பூரண ஒளிக் கற்றைகள் ... நாங்கள் எங்கள் கடமையைச் செய்கின்றோம். நீங்களும் சுதந்திரமாக இயங்குங்கள் ... எங்கள் தவறுக்காக எங்களை மன்னித்து விடுங்கள் ...'' என்று ஏ கோபித்த குரலில் கூறிய ஒளிக்கற்றைகள் தங்கள் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தன. ☐

# நுண்ணறிவுப் போட்டி - 3

## பதில்கள்

1) தியாகி என்பவன் தான் செய்யப்போகும் கருமத்தின் அவசியத்தை உணர்வு பூர்வமாக புரிந்திருக்க வேண்டும்.

2) சமூக விரோத செயல்கள் செய்பவர்களில் மிகச் சிலரே சமூக விரோதிகளாகும்.

விளக்கம் ; ஒருவனால் செய்யப்பட்ட செயல்களை மாத்திரம் வைத்துக்கொண்டு அவனை எடைபோடக் கூடாது, எடை போடவும் முடியாது. செயல்; அச்செயலைச் செய்தவனின் உள்நோக்கம் அல்லது மனோநிலை இவை இரண்டையும் வைத்துக் கொண்டே அம் மனிதன் பற்றிய முடிவுக்கு வரவேண்டும். இவ்விதம் நோக்கும் போது திட்டமிட்டு, விருப்புடன், தாம் செய்வதை உணர்ந்து சமூக விரோதச் செயல்கள் செய்பவன் மாத்திரமே சமூக விரோதியாகும்.

3) பாடசாலைப் பிள்ளைகள் சீருடை போடுவதன் உண்மை நோக்கம் இன்று மிகக்குறைந்த அளவிலேயே நிறைவேற்றப் படுகின்றது.

விளக்கம்: ''பிள்ளைகளிடையே சமூக, பொருளாதார அந்தஸ்து ஏற்றத்தாழ்வு வெளிப்படக் கூடாது என்பதற்காகவே சீருடை அணியும் பழக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் இன்று உடையின் தரம், பாதணியின் தரம், பயன்படுத்தும் உபகரணங்களின் தரம், அணியும் நகைகள் ஆகியவற்றால் ஏற்றத்தாழ்வு வெளிக்காட்டப்படுகின்றது.

4) உண்டி சுருங்குதல் பெண்டிற்கழகு என்பது சமூக வளர்ச்சிக்கு பாதிப்பான ஒரு சமூக ஒழுங்கு.

விளக்கம்: காற்றலை 4 ஐப் பார்க்கவும்

5) தமிழ் மன்னர்கள் காலத்தை நோக்கும் போது கவிஞர்கள், அறிஞர்கள் ஆகியோர் மன்னர்களைச்சார்ந்தே வாழ்ந்தனர். மன்னர்களின் விருப்பு வெறுப்புக்கொப்பவே அவர்கள் செயற்பட்டனர். மன்னன் ஏற்றுக் கொள்ளாத அறிஞர்கள் வறுமையில் வாடினார்கள். புறக்கணிக்கப்பட்டார்கள். சிலவேளைகளில் மரணத்தையும் தழுவிக் கொண்டார்கள் ரோம, கிரேக்க சாம்ராஜ்யங்களிலும் இதே நிலைதான் நிலவியது.... இதிலிருந்து நாம் வரப்போகும்முடிவு, வரப்போகும் சமுதாயத்தில் ஆளுவோர்கள், அறிஞர்கள் ஆகிய இருவருக்கும் இடையேயான உறவு சிநேகபூர்வமானதாக திறனாய்வு தற்திறனாய்வுப் பண்பாடுடையதாக இருக்க வேண்டும் என்பது.

6) ...... நிறுவனமயமாதல் மூலம் மதம் பலவீனப்படுகின்றது.

விளக்கம்:- நிறுவனமயமான மதங்கள் நிறுவனரீதியான பலகட்டுப்பாடுகளை தமது மதத்தைப் பின்பற்றுவோர் மீது விதிக்கிறது. இக்கட்டுப்பாடுகளை மீறியோர் தண்டிக்கவும் படுகிறார்கள். மதநிறுவனங்களில் செயல் படுவோர் தமது பொருளாதாரத்திற்காக இந் நிறுவனங்களில் தங்கி வாழ்கிறார்கள். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர்கள் நிறுவனத்திற்காகச் செயல்பட வேண்டியுள்ளது. நிறுவனமான மதத்தைச் சேர்ந்தவர்கள் எவர்களுக்கும் கருத்துச் சுதந்திரம் இல்லை. நிறுவனத்தின் கருத்திற்கும், நிலைப்பாட்டிற்கும் உட்பட்டே இவர்கள் இயங்க வேண்டும். விரும்பினாலும்சரி, விரும்பாவிட்டாலும் சரி இம் மதநிறுவனங்கள் அரசியல் அதிகாரத்தின் அங்கமாக மாற்றமுறுகிறது. அரசியல் அதிகாரத்துடன் நெருங்கிப் பிணைகிறது. இவ்விதமாக மக்களின் இயல்பான நம்பிக்கைக்குரிய மதத்திற்குப் பதிலாக ஏதோ ஒரு வழியில் மக்கள் மீது திணிக்கப்பட்ட மதமாகின்றது. அரசியல் அதிகாரம் வீழ்ச்சியடையும் போது மத நிறுவனம் பலவீனப் படுகிறது. மதமும் பலவீனப்படுகின்றது. ஆனால் மக்களின் பழக்க வழக்கங்கள், மரபுவழிச் சடங்குகள், சிந்தனைப் போக்குகள் ஆகியனவற்றின் மூலம் தம்மை தங்கவைத்துக் கொண்டுள்ள மதங்கள் வளைந்து கொடுக்கும் ஆற்றல் உள்ளன. வெவ்வேறு கருத்துக்களை உள்வாங்கிக் கொள்கின்றன; அரசியல் அதிகார மாற்றங்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் ஆற்றல் மிக்கனவாய் உள்ளன. தெற்காசியாவில் இந்துமதம் இதற்கோர் எடுத்துக் காட்டாகும்.

7) தமிழீழ நிலைமையில் போர்க்கால முற்றுகை, நெருக்கடிகளின் மத்தியில் உருவாக்கப்படும் பொருளாதாரம் தேசிய பொருளாதாரத்தின் முன்னோடி.

விளக்கம்:- இது ஒரு பொருளாதார வகைப்பட்ட போர்க்கால இசைவாக்கமேயாகும். ஆனால் தேசிய பொருளாதாரத்தை நோக்கமாகக் கொண்ட இசைவாக்கம் ஆனபடியால் இதை தேசிய பொருளாதாரத்தின் முன்னோடி எனக் கூறலாம்.

8) அரிச்சந்திரன் கதை ஆதிகால அநாகரிக சமூக பழக்கவழக்

கங்களை அள்ளிச் சொரிந்து கொண்டிருக்கும் ஒரு அழுகிய சதைப்பிண்டம்.

விளக்கம்:- முனிவர்களும் ரிஷிகளும் மன்னர்களை ஆட்டிப் படைப்பதும், ரிஷிகளின் தனிப்பட்ட கோபத்தைத் தணிப்பதற்காக மன்னன் தமது பொறுப்புகளை மறந்தும் துறந்தும் செல்வதுவும், மனிதர்கள் அடிமைகளாக விற்கப்படுவதும், பிராமணர் சைத்திரியர் சூத்திரர் என்ற வகையான சாதி வேறுபாடுகளும், அநாகரிக சமூக பழக்கங்கள் இன்றி வேறென்ன?

9) இன்று பாடசாலை நூல்களில் கலப்புப் பொருளாதாரம் என்ற பெயரில் கற்பிக்கப்படுவது யதார்த்தத்தில் காணக் கிடைக்காத ஒரு பொய்ப் பிரச்சாரம்.

விளக்கம்:- சமதர்ம பொருளாதாரமும், முதலாளித்துவ பொருளாதாரமும் ஒரு நாட்டினுள் இருக்கமுடியாது. சமதர்ம அரசின் கீழேயே சமதர்ம பொருளாதாரம் இருக்கும், அதேபோல் முதலாளித்துவ பொருளாதாரம் முதலாளித்துவ அரசாலேயே பேணப்பட முடியும். சிறிலங்கா அரசு முதலாளித்துவ அரசு. இவ்வரசுக்கு சொந்தமான தொழில் நிறுவனங்களையே அரசு சமதர்ம நிறுவனங்கள் என்று கூறுகின்றன. முதலாளித்துவத்தின் தலைமை நாடான அமெரிக்காவில் கூட அமெரிக்காவுக்கு சொந்தமான நிறுவனங்கள் உண்டு.

10) மொழி பெயர்க்கப்பட்ட ஆரிய நூல்களுக்கு எதிராக ஈ. வே. ரா. பெரியாரால் மேற் கொள்ளப்பட்ட இயக்கம் தமிழ் வாணியின் செழுமையைப் பலவீனப்படுத்தியுள்ளது. □

# பந்திக்கு முந்து

விருந்து மண்டபங்களில் சாப்பாட்டுப் பந்தியை நோக்கி விரைந்து ''பந்திக்கு முந்து படைக்குப் பிந்து'' எனக் கூறிக்கொண்டே சாப்பாட்டுப் பந்தியை நோக்கிப் போவார்கள். மிகச்சிறந்த வீரஉணர்வைக் காட்டி நிற்க வேண்டிய இப் பழமொழி இன்று வெறும் 'சாப்பாட்டுப் பந்திக்கு' ஆகிவிட்டது. மிகவும் வருத்தத்திற்கு உரிய செய்தியாகும்.

அந்நாளில் அரசர்கள் தம் பாதுகாப்புக்கென நால்வகைப் படைகளை வைத்திருந்தனர். யானைப் படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை என அவை நான்காகும் இவையல்லாத இவற்றிற்கும் மேலான ஒரு படையும் இருந்தது. அதுவே 'பந்திப்படை' ஆகும். இதை அக்காலத்தில் தற்கொலைப்படை என வழங்குவர். பகைவரது நாட்டின் படை வலிமையை அறிந்து வரவும் வலிமைமிக்க பகைவர் வகுத்த போர் வியூகத்தை உடைப்பதற்கும் இப்படை பயன்படுத்தப்பட்டது.

இப்படையில் பணியாற்றும் வீரர்கட்கு ஆபத்து மிகுதியாகும். போரில் ஈடுபட்டவர் திரும்பி வருவார்கள் என்ற உறுதி இல்லை பகைவரது படையைத் துளைத்துக் கொண்டு நுழையும் இப்படை வீரர் அங்கேயே கொல்லப்பட்டு மரணமும் அடையலாம். எனவே உயிரைத் தியாகம் செய்யத் தயாராய் இருக்கின்ற வீரம் செறிந்த ஒருவனே இப்படையில் சேரமுடியும்.

எனவே சுத்த வீரனாகிய ஒருவன் இப்படையில் சேரவே விரும்புவான். நால்வகைப் படையில் இருப்பவர்கள் மிகச்சிறந்த வீரர்களே ஆயினும் நால்வகைப்படையில் சேர விரும்புவதிலும்பார்க்க பந்திப் படையில் சேர முந்திக்கொண்டு செல்வார்கள். இந்த அடிப்படையில் தான் ''பந்திக்கு முந்து படைக்குப்பிந்து'' என்ற பழமொழி இந்நாட்டில் பிறந்தது. இத்தகைய வீரப் பழமொழி இன்று வெறும் சாப்பாட்டுப் பந்திக்கு வழங்குவது மிகவும் வருத்தத்திற்குரியதாகும்.

ந. துவாரகநாதன்
இந்து ம. வி.
கிளிநொச்சி

# தலைமை பற்றி ஒரு சமூக உளவியல் பார்வை

சமூக உளவியலின்படி தலைமை இரு வகைப்படும். ஒன்று முறைசார் (Formal) தலைமை, மற்றையது உண்மைத் தலைமை (Real leadership)

முறைசார் தலைமை:

நிறுவனப்பட்ட சமூக நிலமைகளில் முறைசார் தலைமையைக் காணலாம். நிறுவனப்பட்ட நிலைமையில் சமூக வாழ்க்கை கூட்டுத் தேவைகளைச் சுற்றி அமைக்கப்படுகிறது. உறுப்பினர் சில செயல்களைச் செய்யவும், சில சமூக நிலமைக்குட்படவும் வேண்டும், எடுத்துக்காட்டாக, எமது பண்பாட்டிலுள்ள சில சடங்குகளைக் காணலாம். பெயரிடல், பிறந்த நாள் நிகழ்ச்சிகள், திருமணம், ஈமச் சடங்குகள் முதலிய பல சடங்குகள் உள்ளன. இவற்றில் தனியான குறிப்பிட்ட நிலைகளுக்குள் உட்பட வேணடியதிருக்கிறது. இம் முறைகள் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவையல்ல. இந்த அதிகாரம் அவரவர்களுடைய பதவியால் ஏற்படுகிறதே அன்றி, அவர்களுடைய திறமையால் அன்று. சமயகுரு, தந்தை, மாமன்... இத்தியாதியோர் நிறுவனத் தலைவர் என்ற முறையில் ஒரு சடங்கை நடத்துகிறார்கள். ஆனால் அவர்களுக்கு அதைப்பற்றி புதிது புனையும் சுதந்திரம் கிடையாது. இத்தகைய தலைவரே முறைசார் தலைவர் ஆவர். முறைசார் தலைமையில் மேலாண்மை செலுத்தவும் மனமாற்றம் ஏற்படுத்தவும் முயற்சி தோன்றுவதில்லை. முறைசார் தலைவர் வெறும் தலை மனிதரே (Head man) யாவர். அவர் என்னென்ன செய்ய வேண்டும் என்பது மரபு வழக்கு மூலம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசியற் சட்டப்படி அமைந்த மன்னரும் பாடத்திட்டத்தையும், முறையையும் மாற்றியமைக்க உரிமையில்லாத பள்ளி ஆசிரியரும் இத்தகைய முறைசார் அல்லது பெயரளவுத் தலைவரேயாகும். அவர்கள் தாம் செய்யும் வேலையில் ஓரளவு சொந்தத் திறத்தையும் காட்டக்கூடும். ஆனாலும் அவர்கள் ஏற்கனவே அமைக்கப்பட்ட நிறுவன வரம்புக்குளளேயே செயற்படுவர்.

உண்மைத் தலைமை (Real leadership)

ஒருவர் பிறர் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு, காரியங்களைத் தாமாகத் திட்டமிடுவதற்கு, பிறருடைய ஒத்துழைப்பைப் பெறுவதற்கு உண்மைத் தலைமை அல்லது ஆளுடைத் (Personal) தலைமை தேவைப்படுகிறது. ஒரு குழு ஒரு கடமையைச் செய்யவேண்டியிருக்கும் போது இத்தகைய தலைமை தோன்றுகிறது. உறுப்பினருடைய சக்திகளை வழிப்படுத்தவும், ஒத்துச் செயலபுரியத் தூண்டவும் ஒருவருடைய துணை தேவையாகிறது. இவ்வாறே புதுப்புனைவுகள் ஏற்படுவதாலும் சமூகத்தின் பொருளாதார அமைப்பு மாறுவதாலும் மரபு வழிவந்த சமூகத் தொடர்புகளை மாற்றியமைக்க வேண்டியிருக்கிறது. இந் நிலைமையிலும் உண்மைத் தலைமை தேவைப்படுகின்றது. மக்களின் அற உணர்ச்சி பெருகி, வாழ்க்கைக்குரிய புதிய, உயரிய விழுமியங்களைக் காண்பதற்கும் இத்தகைய தலைவர்கள் தேவையாகின்றனர். இத்தகைய காலங்களில் கூரிய எண்ணங்களும் தெளிவான பார்வையும், உய்த்துணர்வும், தான் தொடங்காற்றலும் உள்ள தனியாட்கள் தலைமை தாங்குகிறார்கள். உண்மைத் தலைவர்கள் தோற்றம் பெறுகிறார்கள்.

(வி. வி. அகோல்கார் அவர்களின் சமூக உளவியல் என்னும் நூலைத் தழுவியது)

# கூடைப் பந்தாட்டம் (Basket Ball)

இன்று உலகமெங்கும் கூடைப் பந்தாட்டம் (Basket Ball) பிரபலமாகியுள்ளது. இந்த ஆட்டம் அமெரிக்க நாட்டில் மஸாசு ஸெட்ஸிலுள்ள ஸ்பிரிங் ஃபீல்டு என்னுமிடத்தில் பிறந்தது. இங்குள்ள அனைத்துலக 'யங்மென்ஸ் கிருஸ்தியன் அசோசியேஸன்' பயிற்சிப் பள்ளியில் 1881 - ம் வருடம் ஜேம்ஸ் நைஸ்மித் என்பவர் இதனைக் கண்டு பிடித்தார். நைஸ்மித் அந்தப் பள்ளியின் உடற் பயிற்சி ஆசிரியராக இருந்தார். தினமும் ஒரே விதமான பயிற்சிகளைச் செய்து அலுப்புற்ற பள்ளி மாணவர்கள் ஒரு மாற்றத்தை விரும்பினார்கள். ஆகவே நைஸ்மித் தமது மாணவர்களுக்கு உற்சாகமூட்டக் கூடிய ஒரு புது விளையாட்டை உருவாக்குவதில் முனைந்தார். ரெட் இண்டியர்களின் கோல் பந்தாட்டம் (*Red Indian Lacrosse*) மற்றும் பிரிட்டிஷ் கால்பந்தாட்டத்தின் அடிப்படைக் கூறுகளை ஒன்று சேர்த்து அவர் கூடைப் பந்தாட்டத்தை உருவாக்கினார்.

லாக்ரோஸ் எனப்படும் கோல் பந்தாட்டத்துக்கு தேவைப்படுவது போன்ற கோல் இதற்கு அவசியமில்லை. சாக்ஸர் (soccer) விளையாட்டிலுள்ளது போல பந்தை உந்த வேண்டியதும் இல்லை. இந்த ஆட்டத்தில் பந்து கூடைபோன்ற அமைப்பு வழியாக தூக்கிப் போடப்படுகிறது. எனவே தான் இந்த விளையாட்டைக் கூடைப் பந்து என அழைத்தார்கள். இரண்டாம் உலகப் போருக்குப் பின் தான் இந்த ஆட்டம் பிரசித்தி பெற்றது. ஐந்து ஐந்து பேர் அடங்கிய இரண்டு குழுக்கள் இதை விளையாடினர். முதல் கூடைப்பந்தாட்டம் 1892 ஜனவரி 20 - ம் தேதி விளையாடப்பட்டது. 1930 - ல் 'இங்கிலீஸ் பாஸ்கெட்போல் அசோசியேஷன்' நிறுவப்பட்டது. 1936 - ல் இந்த ஆட்டம் ஒலிம்பிக் நிகழ்ச்சிகளில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இதன் அடுத்த 7 ஒலிம்பிக் விளையாட்டுக்களில் அமெரிக்க குழு தொடர்ந்து வெற்றி பெற்றது. இலங்கையில் இவ் விளையாட்டு விருத்தியடையவில்லை. எமது தமிழ்ப் பிரதேசத்தில் ஒரு சில மாவட்டங்களில் மட்டுமே இதற்கான ஆடுகளம் (மைதானம்) உள்ளது.

**ந. துவாரகநாதன்**
கிளி / இந்து ம. வி.
கிளிநொச்சி

## சீனப் பெருஞ்சுவர்

சீனப் பெருஞ் சுவர் தான் உலகிலேயே மிக நீளமான சுவர். இதன் நீளம் 2694.4 கிலோ மீற்றர் உயரம் ஒரே சீராக இல்லை. சில இடங்களில் கூடியும் சில இடங்களில் குறைந்தும் உள்ளது. குறைவான உயரம் 4.57 மீற்றர். கூடிய உயரம் 9.2 மீற்றர். இதன் அகலம் 9.75 மீற்றர்.

கி. மு. 246 ம் ஆண்டு வரை சீனா பல மாகாணங்களாகப் பிளவுபட்டிருந்தது. 'ஷி குவாங் ஷி' என்ற அரசன் எல்லா மாகாணங்களையும் ஒன்று சேர்த்துச் சீனப் பேரரசை உருவாக்கினான். வடக்கிலிருந்து மங்கோலியர்கள் சீனா மீது படையெடுக்கலாம் என்ற அச்சம் அவனுக்கு இருந்தது. அதைத் தடுப்பதற்காகவே இப் பெருஞ் சுவரைக் கட்டுமாறு பணித்தான்.

இதன் கட்டுமான வேலை கி. மு. 221 ம் ஆண்டு ஆரம்பித்தது. கட்டி முடிப்பதற்கும் பதினைந்து வருடங்கள் எடுத்தன.

நீண்டகாலம் செல்வதற்கு முன்னரே இச் சுவர் பல இடங்களில் உடைந்து போனதால் மங்கோலிய படையெடுப்பை இதனால் தடுக்க முடியவில்லை.

— சிவா —

# பாரம்பரிய வைத்திய முறையின் இன்றைய அவசியம்

உலகத்தில் உள்ள ஒவ்வொரு தேசத்திற்கும் அந்த மண்ணுக்குரிய தனித்துவமான இயல்புகள் - குணாம்சங்கள் இருக்கும். அந்த வகையில் ஒவ்வொரு தேசத்திலும் அந்த மண்ணுக்குரிய பாரம்பரிய வைத்திய முறை ஒன்றும் இருந்து வருகிறது.

மனிதன் தோற்றங் கண்டு, காட்டு வாழ்விலும் கிராம வாழ்விலும் அதன் பின்பு நகர வாழ்விலும் ஈடுபட்டான். அந்த நிலைகளில் - அதாவது மனித வாழ்வின் ஒவ்வொரு படிநிலைகளிலும் அவனுக்கு வைத்திய அறிவும் தேவைப்பட்டு இருந்தது.

ஒரு காலத்தில், கீழைத்தேசங்களிலும், வளர்ச்சி கண்ட வைத்திய முறை இருந்தது. காலப்போக்கில், மேலைத் தேச நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு ஆளான கீழைத் தேசங்களில், அத் தேசங்களிற்குரிய பல தனித்துவமான இயல்புகள் அழிந்தன அல்லது மாற்றங்கண்டன. அப்படியானதொரு நிலையில், சுதேசிய வைத்திய முறைகளும் பாதிக்கப்பட்டன, ஊக்குவிப்பில்லாமல் அழியும் நிலைக்குச் சென்றன.

ஒரு தேசத்தில் தோற்றம் பெற்று நிற்கும் புரட்சிகரமான விடுதலைப் போராட்டத்தை அழிக்க நினைக்கும் அடக்குமுறை அரசுகள், அங்கு போராடும் இனத்தின் அழிவிற்காக தன்னால் இயன்ற அனைத்து வழிமுறைகளையும் மேற்கொள்ளும். அந்த வகையில், தமிழீழத்தின் மீதும் சிங்கள அரசு பல கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது.

ஒரு புறத்தே கண்மூடித்தனமான குண்டுகளை வீசிய பேரினவாத அரசு காயமடைந்தவர்கள் உயிர்தப்பக் கூடாது என்பதற்காக மருந்துப் பொருட்களின் வரவையும் தடுத்து வருகின்றது.

இதனால் இன்று, எங்கள் முன்பு உள்ள முக்கியமான பிரச்சினைகளில் மருத்துவப் பிரச்சினையும் ஒன்றாகியுள்ளது.

எமது தேசத்திலும், நீண்ட நெடுங்காலமாக ஓர் பாரம்பரிய வைத்திய முறை நடைமுறையில் இருந்தது. எமது பரம்பரையினர் வீரம்மிக்கவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள். போர்க் களங்களில் காயமடைந்திருக்கிறார்கள். அக் காலங்களில், ரணசிகிச்சைகள் எல்லாம் பாரம்பரிய வைத்தியர்களினால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழ் பாரம்பரிய வைத்திய முறையே சித்தவைத்திய முறை எனப்படும். ஆரிய பாரம்பரிய வைத்தியமுறையே ஆயுள் வேத வைத்திய முறை எனப்படும்.

அன்னியர்களின் வருகையின் பின்பு - எமது தேசத்தின் ஆட்சியதிகாரம் அவர்களின் கைக்கு மாறியதால், சித்த வைத்திய முறை ஊக்குவிக்கப் படாமல் போனது.

அன்னிய வைத்தியமுறை எமது தேசத்தில் உட்புகுந்துகொண்டது. அதைவிட அதிகமாக பாரம்பரிய வைத்திய முறையின் அழிவிற்கு, நம் நாட்டு வைத்தியர்களும் காரணமாக அமைந்து விட்டார்கள்.

பொருளாதார காரணிகளாலும் மத நம்பிக்கையினாலும் எமது பாரம்பரிய வைத்தியர்கள், பாரம்பரிய வைத்தியத்தை குடும்ப பரம்பரை வைத்தியமாக மாற்றி விட்டார்கள். இதனால் அரும் பெரும் மருத்துவ முறைகள் பல எம்மிடையே அழிந்தே போய் விட்டன.

பொதுவாக நெருக்குதல் காலங்களில், அம் மக்களுக்கேஉரிய மருத்துவ முறைகளில் உண்மையான - தனித்துவமான பல வடிவங்கள், வெளிப்படுவதும், சூழலுக்கேற்ப புதிய - சரியான பரிமாணத்தை அடைவதும் இயல்பானது. இதற்கு உதாரணமாக, சீனாவின் அக்கு பஞ்சர் வைத்திய முறையை சொல்லலாம்.

சீனாவின் பாரம்பரிய வைத்திய முறையான அக்கு பஞ்சர் அழியும் நிலையிலிருந்த பொழுது, சீனாவில் ஏற்பட்ட போராட்டசூழல், அக்கு பஞ்சர்வைத்தியமுறை புதிய வடிவத்தை எடுக்கச் செய்தது. அதனால் இன்றைய உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்டதொரு வைத்திய முறையாக அக்குபஞ்சர் வைத்திய முறை மதிக்கப்படுகிறது.

எமது நாட்டு வைத்தியர்களும் பாரம்பரிய வைத்திய முறையால், இந்த மண்ணின் தேவைகளை பெருமளவு நிவர்த்தி செய்யலாம் என்பது ஓர் வெளிப்படையான உண்மையாகும்.

உடலிற்கு ஆரோக்கியத்தைத் தரும். பக்கவிளைவுகளை ஏற்படுத்தாத பாரம்பரிய வைத்திய முறை உண்மையில் போற்றப்பட வேண்டியதும் - பேணிப் பாதுகாக்கப்படவேண்டியதுமாகும்.

இந்த நேரத்தில், எமது பாரம்பரிய வைத்தியர்களுக்கும் சிறு ஆலோசனைகள் சொல்ல வேண்டி உள்ளது.

உலகம் நவீன வளர்ச்சிப் போக்கில் எவ்வளவோ முன்னேறி விட்டது. இந்த நிலையில் இன்றும் கடுமையான வைத்திய முறைகளை மாற்றம் எதுவுமின்றி இறுக்கிக் கடைப்பிடித்தல் கூடாது, வைத்திய துறையின் புதிய வளர்ச்சியையும் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். மக்கள் எல்லோரையும், இந்த வைத்தியமுறை பற்றிப் பிடிக்கச் செய்ய வேண்டும்.

போராட்டம் நடக்கும் எங்கள் தேசத்திற்கு, பாரம்பரிய வைத்திய முறையும் - வைத்தியர்களும் இன்று அதிகமாக தேவை என்பதை அனைவரும் உணர்ந்து கொண்டு செயற்படவேண்டும். ●

- இளவேனில்

# ○ அறிவியல் உண்மைகள்

## நுளம்பு (கொசு)

❀ ஆண் நுளம்பு பூக்களில் இருக்கிற தேனையும், தேனைச் சுமந்து வரும் எறும்புகளை வழி மறித்தும் தங்களுக்கு வேண்டிய உணவை எளிதாக எடுத்துக் கொள்கின்றன.

❀ பெண் நுளம்பிற்கு முட்டையிட மனித இரத்தம் (ஏனைய பிராணிகளின் இரத்தமும் செல்லுபடியாகும்) தேவை. இரத்தமே அதன் உணவாகவும் இருக்கிறது. இனவிருத்திச் சுமையைச் சுமக்கும் பெண் நுளம்பு மனிதனுக்கு தொல்லை தருகின்றது. ஒரு சொட்டு இரத்தத்தில் சுமார் 40 முதல் 50 வரையான கொசுக்கள் தமது வயிற்றை நிரப்பிக் கொள்ளுகின்றன.

❀ நுளம்பு என்ற நிலைக்கு வந்த பின்பு கொசுவின் ஆயுள் இரண்டு மாதங்களே! இதற்குள் இவை 5 தலைமுறைகளை உருவாக்கி விடும். ஒரு முறைக்கு 40 முதல் 400 முட்டைகள் இடும். முட்டைகள் பொரிய நீர் தேவை. இம்முட்டைகள் ஐந்து ஆண்டுகள் வரை கூட நீருக்காக உயிருடன் இருக்கும்.

❀ பெண் கொசுக்கள் எல்லா மனிதர்களையும் கடிப்பதில்லை. சிலரை தவிர்த்து விடுகின்றன. மனித உடலின் ஈரப்பதம், கதகதப்பு, வியர்வையில் உள்ள வாடை இதையெல்லாம் பொறுத்துத்தான் அவை மனிதர்களை தேர்ந்தெடுக்கின்றன.

❀ இரவு நுளம்பு, பகல் நுளம்பு என்று இருவகை நுளம்புகள் உண்டு. இரவு நுளம்புக்கு இரவில் கண் தெரியாது. மோப்ப சக்தியாலேயே அது மனிதனைக் கண்டு பிடிக்கும். மனிதன் வெளியிடும் கரியமில வாயுவை குறியாக வைத்து மோப்பம் பிடித்தே அது மனிதனை அடைந்துவிடும் பகல் நுளம்பிற்கு மோப்ப சக்தியும் உண்டு, பார்வையும் உண்டு.

❀ நுளம்பு தனது ஊசிக் கருவிகளால் மனித உடலைத் துளைத்து இரத்தத்தை உறிஞ்சும். அப்போது வெளிவரும் இரத்தம் உறையாமல் இருக்க அது தனது எச்சிலை கடிதுவாரத்தின் மேல் தடவுகிறது.

❀ நுளம்பின் ரீங்கார மென்பது அதன் சிறகுகளின் வேகமான அசைவேயாகும். ஒரு விநாடிக்கு 250 முதல் 600 முறைகள் சிறகை அசைக்கின்றன. இந்த ரீங்காரம் நுளம்புகள் தமக்கும் ஏற்படுத்தும் ஒரு செய்தித் தொடர்பு வழிமுறையாகவும் இருக்கின்றது. உதாரணமாக கடிக்கும் நுளம்பை நீங்கள் விரட்டும்போது அது பறக்கும் ஒலிக்கும்- அது உங்கள் மீது வந்து அமரும்போது உண்டாக்கும் ஒலிக்கும் வித்தியாசமிருக்கும்.

## குறள் வெள்ளம்



### வாய்மை

எப்போதும் உண்மையே பேசுவேன். இதனால் எவர் மனம் புண்பட்டால் என்ன? யாருக்கு என்ன பிரச்சினை உருவானால் என்ன? அதைப்பற்றியெல்லாம் எனக்குக் கவலை இல்லை.

இப்படிக் கதைப்பவர்களைக் கண்டிப்போம். பேசுகின்ற விடயம் எவரைப் பாதிப்பதைப்பற்றியும், கவலைப்படாது அது உண்மை என்பதற்காக ஊர் முழுவதும் பறைசாற்றி விடலாமா?

பேசப்படுகின்ற விடயம் உண்மையாக இருக்கலாம். ஆனால் இதனால் யாரோ பாதிக்கப்படுகின்றார்களோ. தவிர, எவருக்கும் உதவாத நன்மை தராத உருப்படியில்லாத உண்மையாக அது இருப்பின் இந்த உண்மையைப் பேசுவது பெருமை ஆகாது.

சில உண்மைகளையும் கூட இப்படியான சந்தர்ப்பங்களில் மறைப்பதும் தாங்குவதும் வாய்மையே.

எனவே யாருக்கும் எந்தத் தீமையும் தராமல், எவர் மனதையும் வருத்தாமல் பேசப்படுவதே வாய்மை எனப்படும்.

*''வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்*
*தீமை இலாத சொலல்''*

— *0291 (வாய்மை)*

**'அம்பிகை பாகன்'**

## கவிதை

### வெற்றிகரமான தோல்விகள்

விழுந்த போதெல்லாம்
வலித்தது,
விரக்திப்பாயில்
மனம் துயின்றது.

நம்பிக்கை ஊன்றுகோலுடன்
மீண்டு எழுந்தேன்
மறுபடி வீழ்ச்சி!

ஒவ்வோர் அடி நகர்விலும்
அடிகள்.
காயங்களின் மீதே
காயங்கள்.

களைப்பாற ஒதுங்கிய
புல்வெளிகளின்
உள்ளே நெளிந்தன
பாம்புகள்.

பாதையை மறைத்தன
பனிப் புகார்கள்.
பயணம் தொடர்ந்தது.

அடிகள்யாவும்
அனுபவங்களாயின.
இடிந்த இதயம்
இரும்பையொத்தது
வலித்த இடங்கள்
வைராக்கியம் பெற்றன.

ஓர் பயணத்தின் முடிவில்
அல்லது,
இன்னோர் பயணத்தின்
ஆரம்பத்தில் நின்று
திரும்பிப்பார்க்கிறேன்.

ஓ! எத்தனை தோல்விகளை
கடந்திருக்கிறேன்
வெற்றிகரமாக...!

— சிபி

# 'அகதிகள்'

'அகதி' என்கிற பெயர் இப்போது எல்லோருக்கும் பழக்கப்பட்டுவிட்ட ஒன்றாகி விட்டது. எல்லோராலும் அடிக்கடி உச்சரிக்கப்படும் சொற்பதமாகவும் மாறிவிட்டது.

1958ம் ஆண்டு தொடக்கம் அவ்வப்போது தென்னிலங்கையிலும், மலையகத்திலும் இனக்கலவரங்கள் இடம் பெற்றன. அதனால் அங்கிருந்து ஏராளமான மக்கள் இடம் பெயர்ந்து தமிழீழப்பகுதிகளுக்கு வந்தனர். நூற்றுக்கணக்கிலும் பின் ஆயிரக்கணக்கிலும்!

அப்போது தான் இங்குள்ள சாதாரண பாமர மக்களுக்கும் 'அகதிகள்' என்கிற சொல்லுக்கு அர்த்தம் தெரிய வந்தது; அந்த வார்த்தை அவர்களுக்கு பரிச்சயமானது.

கோயில்களில் திருவிழா நடாத்துவது போல் வருடாவருடம் தென்னிலங்கைப் பகுதிகளிலும் மலையகத்திலும் வாழும் தமிழர்கள்மீது சிங்கள இனவாத அரசு தாக்குதல்களை கட்டவிழ்த்துவிடும். அப்போதெல்லாம் அங்கு வாழும் தமிழர் கொல்லப்பட்டும், காயப்படுத்தப்பட்டும், உடைமைகள் சூறையாடப்பட்டும் நிர்க்கதியாக்கப்பட்டனர்.

வெறும்கையுடன் இவர்கள் தமிழீழப்பகுதிகளுக்கு வந்தனர். அகதிமுகாம்களில் தங்கினர். பின்னர் தமிழீழத்திலேயே நிரந்தரமாக வாழவும் தொடங்கினர். அகதிகள் குடியேற்றத்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

இன்று தமிழீழத்தில் இனவாத எதிரியின் தாக்குதல்கள் தரையிலும், கடலிலும், வானிலுமாக நிமிடத்திற்கு நிமிடம் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்விளைவால் திடீர் திடீரென 'அகதிகள்' உருவாகிக்கொண்டிருக்கின்றனர்.

உயிரிழப்பு, உடைமைகள் இழப்பு, காயப்படுதல் இவற்றுடன் பசி, பட்டினி என்பனவும் தமிழீழ மக்களின் அன்றாட அனுபவங்களாகிவிட்டன.

ஒரு பகுதியில் தாக்குதல் இடம்பெறும் போது இன்னொரு பகுதிக்குச் செல்லும் மக்கள் அந்தப்பகுதி மக்களின்

பார்வையில் 'அகதிகள்'. பின் அந்தப்பகுதியில் தாக்குதல் நடாத்தப்படும்போது அவர்களும் 'அகதிகள்' ஆகின்றனர்.

இங்கு நாம் சொல்ல வருவது என்னவென்றால் - இன்று சமூகத்தில் 'அகதிகள்' பற்றி நிலவும் பார்வையைப் பற்றி. அதாவது, 'அகதிகள்' என்கிற பதம் சமூகத்தில் அருவருப்பாகவே உச்சரிக்கப்பட்டு வருகின்றது. 'அகதிகள்' தாழ்வானவர்களாகவே சமூகத்தில் மதிப்பிடப்படுகின்றனர். சமூகத்தை ஊடுருவிப்பார்க்கும்போது இது நன்கு புலப்படுகின்றது.

நாளடைவில் 'அகதிகள்' என்பது சாதி அமைப்புக்களில் ஒன்றாக கணிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எந்த வேளையும் எந்தப்பகுதியிலும் எதிரியின் தாக்குதல் நிகழலாம். அந்த வேளைகளில் நாம் இடம் பெயர நேரலாம். அப்போது நாமும் 'அகதிகளா'வோம்.



விவேக்

இவ்வாறான இக்கால கட்டத்தில் 'அகதிகளா'கப் போகும் நாம் எவ்வாறு பாதிப்புற்ற இன்னொருவரை 'அகதிகள்' என குறைவாக நோக்கலாம்? வியப்பானதும் வேதனையானதுமான ஓர் எண்ணக்கரு இது.

இடம்பெயர்ந்து வரும் மக்களில் அதிகமாக வறிய மக்கள்மீதே இந்த 'அகதி' முத்திரை அழுத்தமாக குத்தப்படுகிறது.

உதாரணத்திற்கு:-

இன்று தீவுப்பகுதிகளிலிருந்து ஏராளமான மக்கள் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்துள்ளனர். இவர்களில் ஓரளவு வசதிபடைத்தோர் உறவினர்கள் வீடுகளிலோ, தெரிந்தவர்கள் வீடுகளிலோ தங்கினர். அதிகமாக வறிய மக்களே அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர்.

இவர்களே பாதிக்கப்பட்டவர்களாகின்றனர். 'அகதிச்சனம்' என ஏளனமாகவும் அழைக்கப்படுகின்றனர். எத்தனையோ இன்னல்களை அனுபவித்தும், அனுபவித்துக் கொண்டிருக்கும் எமது மக்களில் சிலரின் மனநிலையில் எவ்வித மாற்றங்களும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

எம்மைச் சுற்றியுள்ள பிற்போக்கான சமூக வேலிகளை உடைத்தெறிந்து வெளியேறவேண்டிய கால கட்டத்தில், மேலும் வட்டங்களை அமைத்து அதற்குள்ளும் சிறு சிறு வட்டங்களை ஏற்படுத்தி அதனுள் நின்றுகொண்டிருப்பவர்களை என்னவென்று சொல்வது?

இராணுவரீதியாக எதிரியினால் ஒடுக்கப்பட்டு வந்த நாம் இன்று பொருளாதாரரீதியாகவும் ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு வருகின்றோம்.

பசி, பட்டினி நிலைகளுக்குட்படுத்தி போராட்டத்திலிருந்து தமிழ் மக்களை அன்னியப்படுத்த வேண்டும் என்பதே எதிரியின் எண்ணம். மக்களை போராட்டத்தில் வெறுப்படையச் செய்ய இன்னும் பல சதித்திட்டங்களை எதிரியானவன் மேற்கொள்ளுவான்.

தமிழ்மக்களின் இயல்பு வாழ்க்கையைக் குழப்பி அவர்களை நிர்க்கதியாக்கி, 'அகதி' வாழ்வினை ஏற்படுத்தி பண்பாடானவாழ்க்கைமுறையை சீரழிப்பதும் எதிரியின் திட்டமாகும்.

இதனை நாம் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். எதிரியின் விமானம் எந்தப்பகுதியிலும் குண்டுகள் போடலாம். நாமும் எந்தநேரமும் இடம்பெயர நேரலாம். இடம்பெயர்ந்து வந்த இன்னொருவரை ஏளனமாகப் பார்க்கக்கூடாது.

இன்னொரு உண்மையையும் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். போராட்டத்தின்போது இழப்புக்கள், அழிவுகள் என்பன தவிர்க்க முடியாதவை. அதைப் போலவேதான் இடப்பெயர்வுகளும்.

சொந்தமண்ணிலேயே ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு இடம்பெயர்ந்து சென்று தற்காலிகமாக தங்கியிருக்கும் மக்கள் அகதிகள் அல்ல. நாமே அகதிகள் என்று அழைப்பது பொருத்தமாகாது, முறையுமாகாது. முடிந்தவரை அவர்களுக்கு உதவ நாம் முன் வர வேண்டும்.

எம்மிடம் இருப்பதை அவர்களோடு பகிர்ந்து கொள்வோம். எதிரியினால் உடைத்தெறிய முடியாத சங்கிலிக் கோர்வையாக எல்லோரும் கைகோர்த்து இணைந்து கொள்வோம்.

# பாரதி நினைவாக...

மார்கழி மாதம் 10 ம் திகதி, மக்கள் கவிஞர் சுப்ரமணிய பாரதியாரின் 110 வது பிறந்தநாளாகும். அவரைச் சிறப்பிக்கும் முகமாக இந்திய மத்தியஅரசு சிறப்பு அஞ்சலுறை வெளியிட்டது. லண்டன் மாநகரில் மக்கள் பாரதியாரின் உருவச் சிலையொன்று திறந்து வைக்கப்பட்டது.

பாரதியின் இலட்சியங்களில் பெண் விடுதலையும் ஒன்றாகும். ஞானச்செருக்குடன் தலைநிமிர்ந்து நடக்கும் புதுமைப் பெண்களை அவர் வரவேற்றார்.

பெண்ணுக்கு மட்டுமே கற்புநெறியை கூறியுள்ள ஆண்மேலாதிக்க சமூகத்தைச் சாடினார்.

''கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்''

எனக் கும்மி கொட்டினார்.

ஆண்மேலாதிக்கத்தை பிசாசு என்று ஒதுக்கித் தள்ளினார்.

''நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி;''

ஆண்மேலாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்ட சடங்குகளை தூக்கித் தூர எறிந்தார்.

''நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்;
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்;
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள்
கேட்டீரோ''

ஆண்மேலாதிக்கம் மனித சமூகத்தின் மாறா விதியல்ல; அது வேதவாக்குமல்ல, புனித பைபிள் ஒழுங்குமல்ல. அது இடையிட்டு வந்த ஒரு சமூக அடக்கு முறையேதான். இதை எதற்காக நாம் பொறுத்திருக்க வேண்டும்? என மிக அழகாக கேட்டுவைத்தார்.

''உடைய வன்சக்தி ஆண்பெண் ணிரண்டும்
ஒருநி கர்செய் துரிமை சமைத்தாள்;
இடையிலேபட்ட கீழ்நிலை கண்டீர்.
இதற்கு நாமொருப் பட்டிருப்போமோ?''

ஆனால் பாரதியின் கனவுகள் நனவானதா? இல்லை என்றே கூறவேண்டும். பாரதி பிறந்த பாரதத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தில் மாத்திரம் ஒரு வருடத்துள் 78,000 மௌனக் கொலைகள் நடந்துள்ளன. (கருச்சிதைவே மௌனக்கொலைகள் என அழைக்கப்படுகின்றன.) கர்ப்பத்தில் வளரும் அச் சிசுக்கள் பெண் குழந்தை என இனங்காணப்பட்டதாலேயே இம் மௌனக் கொலைகள் நடைபெற்றுள்ளன.

கருவை ஆய்வு செய்து ஆணா பெண்ணா என கண்டுபிடிக்க கூடியளவிற்கு அறிவியல் வளர்ந்துள்ளது. இவ் வளர்ச்சி தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. 1986 ம் ஆண்டு மகாராஷ்டிரா மாநிலத்தில் இப் பரிசோதனையைக் கண்டித்து பெண்கள் அமைப்புகளும் வேறு முறபோக்கு அணிகளும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தின. இதனால் மாநில அரசு கரு ஆய்வு தடைச் சட்டம் கொண்டுவந்தது.

தற்போது பாரதியாரின், 110வது பிறந்தநாளிற்கு சில நாட்கள் முன்பாக இந்திய மத்தியரசு நாடு முழுவதற்கும் இது தொடர்பான சட்டம் அவசியம் என்ற முடிவுக்கு வந்துள்ளது.

கரு ஆய்வுகள் நடாத்துவது தடைசெய்யப்பட வேண்டும். ஏதாவது முக்கியம் இருந்தால் மாத்திரம் பதிவு செய்ததன் பின் ஆய்வுக்குள்ளாகலாம். இது தொடர்பான விளம்பரங்கள் தடைசெய்யப் பட வேண்டும். சம்பந்தப்பட்ட பெண்ணின் எழுத்துமூல சம்மதம் பெறபபட வேண்டும். பெண்கள் இது தொடர்பாக வழக்குத் தொடரும் உரிமை உடையவர்களாக்கப்பட வேண்டும்.

பெண்களையும் சம அந்தஸ்துள்ள குடிமக்களாக (பிரஜைகளாக) கருதும் நாள்வரை இவ்விதமான சட்டங்கள் அவசியந்தான, ஆனால் இச்சட்டங்கள் நடைமுறை வலுவுள்ளனவாக இருக்குமா?

பாரதி பிறந்து 110 வது ஆண்டு நாளில் சற்று முன் பின்னாக வெளிவந்த மற்றோர் செய்தியையும் இங்கு குறிபபிடவேண்டும்.

இதுவரை நோபல் பரிசு பெற்றுள்ளவர்களில் 600 பேர் ஆண்கள் 24 பேர் பெண்களாகும். ஆண் பெண் சமத்துவம் தொடர்பான அடைவுகள் எந்தளவிற்கு பலவீனமானவை என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டு.

- லோகன்

# உழவின் உதயம்

○ முத்து விஜயராகவன்

அந்த மனிதன் கவலையுடன் உட்கார்ந்திருந்தான். அவனது அரையில் மட்டும் ஒரு மான்தோல் சுற்றப்பட்டிருந்தது. தலை ஒழுங்காக வாரி விடப்படாமலிருந்தது. ஒரு கையில் நீளமான தடி ஒன்று இருந்தது. ஆம், அவன் ஒரு ஆதிகாலமனிதன்.

சரி, வாருங்கள் அவனுடைய கவலைக்கு என்ன காரணமென்று ஆராய்வோம்.

''அடடா...... என்ன இது அவனது காணியெல்லாம் அலங்கோலமாகக் கிடக்கிறதே'' இது தான் அவனுடைய தோட்டமாம். இந்த மனிதன் பயிர் செய்யுமளவிற்கு ஓரளவு வளர்ச்சியடைந்திருந்தான்.

முன்பெல்லாம் இவன் வேட்டையாடியே உண்டு வந்தான். பின்னர் விலங்குகளைப் பின் தொடர்ந்து அவற்றில் சிலவற்றைப் போலத்தானும் நிலத்தின் கீழிருந்த கிழங்குகளைத் தோண்டி எடுத்து உண்ணப் பழகிக் கொண்டான்.

எனினும் அவன் விரும்பிய தானியங்கள் எல்லாப் பிரதேசங்களிலும் எல்லாக் காலங்களிலும் சீராகக் கிடைக்கவில்லை. அவனது பகுத்தறிவு, வேலைசெய்யத் தொடங்கியது. அவன் தாவரங்களை நுணுகி ஆராய்ந்தான்.

அதன் பயனாக சில விதையினங்களை அவன் பெற்றுக் கொண்டான். தான் பெற்ற விதையினங்களை ஒரு வெளியில் அவன் தூவிவிட்டான்

மழைபெய்தபோது அது முளைத்தது. அவன் காத்திருந்தான் விளைவு கிடைத்தது. ஆனாலும் மிகக் குறைந்தளவு விளைவையே அவனால் பெறமுடிந்தது.

நாம் பார்த்த அந்த ஆதிமனிதனுக்கும் இதைப்பற்றித்தான் கவலை. முதல் நாள்தான் சில விதையினங்களை தன் தோட்டத்தில் தூவியிருந்தான். இரவுகூட நல்லமழை பெய்திருந்தது. ஆதலால் இம்முறை விளைவு சற்றுக் கூடுதலாக இருக்கும் என்றெண்ணி சந்தோசப்பட்டுக்கொண்டு தான் அவன் அன்று தோட்டத்துக்கு வந்திருந்தான். ஆனால் அங்கு தோட்டமிருந்த காட்சியோ அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

ஆம், அவனது தோட்டத்தைக் காட்டுவிலங்குகள் நாசம் செய்திருந்தன. ''விதைகள் முளைக்கும் முன்னரேயே இந்நிலையா?'' என்றெண்ணிக் கவலைப்பட்டான் அந்த ஆதி மனிதன்.

மழையில் நனைந்து சேறாகியிருந்த அம் மண்ணில் காட்டுவிலங்குகளின் கால்தடங்கள் ஆழப்பதிந்திருந்தன. காட்டு விலங்குகளின் மலங்களே எங்கும் நிறைந்து காணப்பட்டன. அவனால் என்னசெய்ய முடியும். அவன் கவலையுடன் வீடு திரும்பினான்.

நாட்கள் நகர்ந்தன. அவ் ஆதிமனிதன் தன் தோட்டத்தைப் பார்த்துவரக்கிளம்பினான். தோட்டத்தையடைந்தவனிற்கு அங்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது.

அவன் அழிந்துவிட்டதெனக் கருதிய பயிர்கள் எல்லாம் நன்கு செழித்து வளர்ந்திருந்தன. எதிர்பார்த்ததைவிட பன்மடங்கு அதிகமான விளைவு கிடைத்தது. அவன் ஆடினான் பாடினான் ஆனந்தக்கூத்தாடினான்.

அடுத்தமுறை பயிரிடுங்காலம் வந்தது. மழைபெய்தது. அவன் சில கால்நடைகளை வலுக்கட்டாயமாகவே பிடித்துவந்து தன் காணியில் விட்டுவிட்டான்.

இப்படி ஒவ்வொரு முறையும் செய்து வரலானான் படிப்படியாக அவனுக்கு தானியங்களிலிருந்து கிடைக்கும் விளைவும் அதிகரிக்கத் தொடங்கியது. அவனது சிந்தனைகளும் வளரத் தொடங்கியது.

அம் மனிதனின் காலம் கடக்க அவனது மகனின் காலம் வந்தது. இந்தத் தலைமுறை இன்னும் சற்று முன்னே சென்று ஆராய்ந்தது.

மண்ணை ஆழ உழும்போதும் உரமிடும் போதுமே விளைவு அதிகரிக்கிறதென்ற தத்துவத்தை அவன் கண்டு பிடித்தான். இந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அவன் ஒரு கருவியை வடிவமைத்தான்.

இரண்டு கிளையுள்ள (Y வடிவ) பலமான தடியொன்றை எடுத்து அதன் இரு நுனிகளையும் சீவிக் கூராக்கினான். தனியாக உள்ள ஒரு முனையில் உறுதியான காட்டுக் கொடியொன்றைக் கட்டினான். கொடியின் மறு முனையில் பழக்கப்பட்ட கால்நடைகளைப் பிணைத்தான். கலப்பை தயாரானது.

அவனுக்குப் பின் வந்த தலைமுறைகள் கலப்பையின் வடிவமைப்பில் இன்னும் பல வியத்தகு முன்னேற்றங்களைச் செய்து தந்தது.

இனி எப்படி உரமிடுவது என்று யோசித்தான். அவனுக்கு ஒரு வழி தென்பட்டது. அதன்படி கால் நடைகளின் மலங்களைச் சேகரித்தான். அதைத் தன் தோட்டத்தில் கொட்டி ஆழ உழுது நிலத்தை வளம்படுத்தினான்.

உழுதுண்டு வாழல் மனிதனின் ஓர் அத்தியாவசிபத் தொழிலாகியது. இப்படியாக உழவின் உதயம் மனித நாகரிகத்தின் உதயத்தோடு பின்னிப் பிணைந்து சிறப்புற்றது.

# போர்ச்சூழலும் சந்தர்ப்பவாதமும்

இன்று வெளிநாடுகளில் வசிக்கும் ஈழத்தமிழர் பலருக்கு 'இலங்கையின் இனப்பிரச்சினை'யே பெரிதும் உதவி செய்தது. அதாவது, அவர்கள் அந்த நாடுகளுக்குப் பல வழிகளூடாகவும் சென்று அங்கு இருக்க அந்நாட்டின் அனுமதி கிடைத்தமைக்கு இப்பிரச்சினைதான் காரணம்.

இன்று வடக்கிலுள்ள சில ஆசிரியர்கள் கொழும்பில் தங்கியிருந்து அங்குள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக கடமையாற்றி வருகிறார்கள். அதற்கு இங்கு இப்போது நிலவும் போர்ச்சூழல், பெரிதும் கைகொடுத்துள்ளது.

இங்கு காணப்படும் போராட்ட நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க முடியாமல் கொழும்புக்கு சென்று 'சுதந்திர'மாகவும் 'சந்தோச'மாகவும் இருக்க சிலருக்கு ஆசை ஏற்பட்டபோதும் உடனடியாக இட மாற்றம் எடுப்பது என்பது கடினமானதாக இருந்தது. இருப்பினும், இங்குள்ள 'போர்ச்சூழல்' அவர்களுக்கு உதவி செய்துள்ளது. கணிசமானோர் இப்போது கொழும்பில் தங்கி படிப்பிக்கின்றனர். வடக்கில் நிலவும் நெருக்கடிகளால் அகதிகளாக கொழும்பிற்கு வந்தோராக அவர்கள் அரசாங்கத்தினால் கருதப்பட்டு அவர்களுக்கு தற்காலிகமாக கடமையாற்ற பாடசாலைகளும் வழங்கப்பட்டு அரைவாசிச் சம்பளமும் வழங்கப்படுகிறது. பிரச்சினை தீர்ந்ததும் அவர்கள் இங்கு வந்து முழுச்சம்பளத் தொகையையும் பெற்றுக்கொள்ளலாம். பெரும்பாலும் ஆசிரியைகளே இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ள முண்டியடிப்பதாக தெரிய வருகிறது.

இதில் வேடிக்கை என்னவெனில், இவ்வாறு கொழும்பில் சென்று வாழும் ஆசிரியர்கள், இங்குள்ள சக ஆசிரிய நண்பர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அங்கு வருமாறு கடிதமெழுதிக் கொண்டிருக்கின்றனர். இதனை ஆசிரியர் ஒருவரே 'சாளர'த்திற்கு கூறினார். தாம் வாழும் மண்ணுக்காகவும், சமூகத்திற்காகவும் நேர்மையுடன் கடமைபுரியும் ஆசிரியர்கள் பலர் இந்த மண்ணிலேயே தொடர்ந்தும் இருக்கிறார்கள். இவர்கள் அவர்களின் சுயநலப் போக்கை இனங்கண்டு நிச்சயம் நிராகரிப்பார்கள்.

# தென்னிலங்கை அரசியல் மாற்றமும் இனப்பிரச்சினையும்

**சாரணன்**

ஏ. ஈ. குணசிங்கா தலைமையிலான தொழிற் கட்சியுடன் இணைந்து பசைவாளியுடன் அரசியலிற் பிரவேசித்தவர் ஆர். பிரேமதாசா. இவர் கீழ்மட்டத்திலிருந்தே தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்தார். காமினி திஸநாயக்கா உயர் குலத்தைச் சேர்ந்தவர். ஒருபெரும் தனவந்தர் அவுஸ்ரேலியாவில் இவருக்கென ஒரு சொந்த அப்பிள் தோட்டம் உண்டு. அதில் 10,000 பேர் வரை பணியாற்றுகின்றனர். இலங்கையிலுள்ள விரல்விட்டு எண்ணத்தக்க கோடீஸ்வரர்களுள் இவரும் ஒருவர். இவர் ஐ தே. க. வில் இணைந்த குறுங்காலத்துக்குள்ளேயே எதிர்காலப் பிரதமர் என டட்லி சேனநாயக்காவால் புகழப்பட்டவர். லலித் அத்துலத்முதலி உயர் குலத்திற்கு உரியவரானாலும் பொருளாதாரரீதியில் சாதாரண மட்டத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தைஎஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் நெருங்கிய நண்பன். லலித் உயர் கல்விக்காக வெளிநாடு செல்ல பொருளாதார வசதியில்லாத சூழலில் பண்டாரநாயக்கா பிரதமரானதும் லலித்திற்கென விஷேசமாக ஒரு புலமைப்பரிசிலை உருவாக்கி ஒக்ஸ்பேட் பல்கலைக்கழகத்தில் கல்விகற்க வசதி செய்தார். இதன்பின் லலித் ஓர் உயர் குடும்பத்தில் திருமணம் செய்து தனது பொருளாதார அந்தஸ்தை உயர்த்திக் கொண்டார். ஐ. தே. க வுக்குள் பல முதிர்ந்த தலைவர்கள் இருந்த போதிலும் லலித்தும், காமினியும் ஜே. ஆரின் செல்லப் பிள்ளைகளாய் பெரும் அமைச்சுக்களைப் பெற்றுக் கொண்டனர்.

பிரேமதாசாவை ஓரங்கட்ட ஜே. ஆர், லலித், காமினி போன்றோர் முயன்ற போதிலும் 1988 ஆம் ஆண்டு அரசியற் சூழல் பிரேமாவை அரசியலில் முன்னணிக்குக் கொண்டுவந்தது, ஐ. தே. க. வுக்கும் சு. க. வுக்கும் இடையில் இருந்த பகைமையைவிட ஐ. தே, க. வுக்குள் இருந்த பகைமை பெரிதாய் இருந்தது. பிரேமாவுக்கும் லலித் - காமினி குழுவுக்கும் இடையில் நடைபெற்ற பெரும் இழுபறியில் இறுதியாக லலித் - காமினி குழு கட்சிக்குள் தோற்கடிக்கப்பட்டு கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறு ஐ. தே. க. வுலிருந்து வெளியேற்றப் பட்ட இக்குழுவினர் தம்மை ஐக்கிய தேசிய முன்னணி என்ற அமைப்பாக வெளிப்படுத்துகின்றனர். ஐ தே. க. வில் இருந்து வெளியேறிய இப்புதிய அணியினரின் அரசியல் எதிர்காலம் எப்படியானதாய் அமையும் என்பதே அரசியல் அவதானிகள் மத்தியில் எழுந்துள்ள கேள்வியாகும்.

இன்றைய நிலையில் பிரிந்த குழுவன் தலைமைத்துவத்தை ''ஒக்ஸ்பேட் மூளை'' லலித் தனதாக்கிக் கொண்டுள்ளார் என்பது தெளிவாகின்றது. திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட எம். ஜி. ஆர். ஒரு புதிய கட்சியை அமைத்து தி. மு. க. வைத் தோற்கடித்தது போல ஐ. தே. க. விலிருந்து வெளியேற்றப்பட்ட லலித்-காமினி குழுவால் ஐ. தே. க. வைத் தோற்கடிக்க முடியுமா? புதிதாகத் தோன்றிய இந்த அணியினருடன் அடுத்த தேர்தல் முக்கிய மூன்று பெரும் கட்சிகளுக்கிடையேயான தேர்தலாக அமையுமா? ஐ. தே. க வில் ஏற்பட்ட பிளவு சு. க. வைப் பதவிக்குக் கொண்டுவந்து விடுமா? எது எவ்வாறாயினும் சு. க. வின் சகாப்தம் முடிவடைந்துவிட்டது என்பதே எனது அபிப்பிராயம்.

ஐ. தே. க. விலிருந்து 1951 ஆம் ஆண்டு பிரிந்து உருவான கட்சியே சு. க. 1951 ல் ஐ. தே. க. விலிருந்து பிரிந்துருவான சு. க. அதுவரை எதிர்க்கட்சியாய் இருந்த இடதுசாரிகளை (லங்கா சமசமாஜக்கட்சி) ஓரந்தள்ளிவிட்டு ஐ. தே. க. வின் நேரடி எதிரணியாகிப் பதவிக்கும் வந்தனர். 1952 பொதுத் தேர்தலில் சு. க. வினால் முன்னணிக்கு வரமுடியாது. போனாலும் 1956 பொதுத் தேர்தலில் சு. க. ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியது.

இன்றைய சூழலில் சு. க. வின் அரசியற் - பொருளாதாரக் கொள்கைகள் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டும், காலாவதியாகியும் உள்ளன. அத்துடன் சு. க. வுக்குள் ஏற்பட்டுள்ள பிளவு. இந்நிலையில் ஐ.தே.க. வில் இருந்து வெடித்த குழுத்தான் ஐ.தே.க.வை எதிர்கொள்ளும் நிலைக்கு எதிர்காலத்தில் வளரக்கூடும். எது எப்படியாயினும் ஒன்றைஒன்று தோற்கடிக்கும் வரை இவ்விரு சக்திகளுக்கும் இடையிலான அரசியற் போட்டியும் பகைமையும் தான் தென்னிலங்கை அரசியலில் முக்கிய இடம் வகிக்கும்.

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள இத்தகைய அரசியல் மாற்றம் இனப்பிரச்சனையின் பால் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்?

இனப்பிரச்சினை அரசியல், இராணுவ, பொருளாதாரம், போன்ற பல்பரிணாமத் தன்மை வாய்ந்தது. ஆனால் இங்கு இப்போது இதனை கட்சிப் பரிமாணத்துடன் மட்டும் வைத்து நோக்குவோம்.

அரசியல்

பிரேமதாசா அரசியல் ரீதியில் பலவீனமான நிலையில் உள்ளார். கட்சிக்குள் இருந்த அரசியற் செல்வாக்கு மிக்கவர்களால் தனக்கு ஏற்படக் கூடிய ஆபத்தைக் கண்டு அரசியற் செல்வாக்குள்ளவர்களை ஒதுக்கிவிட்டு மக்கள் மத்தியில் அரசியற் செல்வாக்கற்ற கீழ்நிலையில் உள்ளோருக்குப் பெரும் பதவிகளை வழங்கலானார். இதனால் பிரேமாவின் எதிரிகள் அரசியற் செல்வாக்கு மிக்கவர்களாயிருக்க பிரேமா அரசியற் செல்வாக்கற்ற சகாக்களாலேயே புடைசூழப்பட்டுள்ளார்.

பிரேமாவின் அரசியல் எதிரிகள் சமூகத்தில் அரசியற் செல்வாக்குள்ளவர்களால் இருக்கும் சூழலில் அரசியற் செல்வாக்கற்ற சகாக்களை வைத்துக் கொண்டு பெரும் அரசியல் தீர்மானங்களுக்குப் போவது கடினமாய் இருக்கும். இவ்வாறான பெரும் தீர்மானங்களுள் ஒன்று இனப்பிரச்சினை பற்றிய விடயமுமாகும்.

ஆயினும் தொடர்ந்து போரை நடத்துவது பிரேமாவிற்கு நீண்டகால தேர்தல், அரசியல் நோக்கில் பாதகம் என்பதாலும் தமிழரினது ஆதரவு சகலருக்கும் தேவை என்பதாலும் பெரும் பொருளாதாரத் தாக்கங்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ளவேண்டியிருப்பதாலும் இனப்பிரச்சினை சம்பந்தமாக ஒரு குறைந்தபட்ச சமநிலைக்கு (தீர்வல்ல) வரவேண்டிய அவசியம், பிரேமாவுக்கு உண்டு. எனவே மீதநிலையில் இது சில மாதங்களுக்குள் முன்னேறலாம் என்று மட்டும் குறிப்பிடலாம்.

# வாசகர்வட்டச் செய்திகள்

4. 12. 91 புதன்கிழமை காலை 9.30 மணியளவில், கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில், அவ்வித்தியாலய மட்டத்திலான ஆய்வரங்கு நடைபெற்றது. உயர்தர மாணவர்களும் சாளரத்தில் ஆர்வமுள்ள ஆசிரியர்களும் பங்குபற்றினார்கள். செல்வன். சி. மலரவனின் (வர்த்தக பிரிவு மாணவன்) தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் செல்வி, பங்கையர்செல்வி, செல்வன் சதானந்தன் செல்வன். வேழமாலிகிதன் ஆகிய மாணவர்களும், திரு. விந்தன் ஆசிரியரும் ஆய்வுரை வழங்கினர். அதிபர் நா. சோதிநாதன் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். பிரதம ஆசிரியர் அ. கௌரிகாந்தனும் கூட்டத்தில் உரையாற்றினார். தமது பாடசாலை மட்டத்தில் சாளரத்தின் வளர்ச்சியை ஊக்கப்படுத்தவும், வாசிப்பு ஆர்வத்தை தூண்டவுமான நோக்குடன் உயர்தர மாணவர்களைக் கொண்ட சாளரம் வாசகர் வட்டம் ஒன்று அமைக்கப்பட்டது. தமது பாடசாலையுள்ளும், தமது பாடசாலையை அண்டிய பிரதேசத்தினுள்ளுமான 'சாளரம்' விநியோகத்தை அவர்களே பொறுப்பெடுத்துக் கொண்டார்கள்.

அதன் அங்கத்தவர்கள்;

| | | | |
|---|---|---|---|
| செல்வன் அ. வேழமாலிகிதன் | உயர்தரம் | கலை | 1992. |
| செல்வன் க. திருவருட் செல்வம் | '' | வர்த்தகம் | 1992. |
| செல்வன் த. சிறிகாந்தன் | '' | '' | 1992. |
| செல்வன் கி. இந்திரன் | '' | '' | 1992, |
| செல்வி ப. கிரிஜா | '' | '' | 1992. |
| செல்வன் சி. மலரவன் | '' | '' | 1992. |
| செல்வி ம. தனுசியா | '' | விஞ்ஞானம் | 1991. |
| செல்வன் க. சுரேஷ்குமார் | '' | '' | 1992. |

செல்வன் சி. இந்திரன் இக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

4.12.91, புதன் கிழமை மதியம் 1மணிக்கு அக்கராயன் மத்திய மகா வித்தியாலயத்தில் சாளரம் ஆய்வரங்கு நடைபெற்றது. ஆண்டு ஒன்பதிற்கு மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் பங்குபற்றினர். அக்கராயன் கொத்தணி அதிபர் திரு சின்னராசா கூட்டத்திற்கு தலைமை தாங்கி ஆய்வுரையும் வழங்கினார். செல்வி க. சிவமதி செல்வி ந. சந்திரதேவி ஆகிய மாணவிகளும், செல்வி யோகேஸ்வரி ஆசிரியையும் ஆய்வுரை நடத்தினார்கள். பிரதம ஆசிரியர் அ கௌரிகாந்தன் அவர்களும் கூட்டத்தில் பங்கு கொண்டு உரையாற்றினர்.

# போரும் அதன் சமூகப் பயன்பாடும்

- மாதுங்கன் -

## போரின் சமூகப் பயன்பாட்டை மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள் எவை?

போர் என்பதே கொடுமையானது, அது எவ்வித சமூக பயன்பாடும் அற்றது என்ற கருத்தை நாம் ஏற்கனவே நிராகரித்துவிட்டோம். சுரண்டலும், மேலாதிக்கமும், ஆகிரமிப்பும் இருக்கும் வரை போரும் இருக்கும். இவை முற்றாக ஒழிக்கப்படும்வரை போரை மனித சமூகத்தால் தவிர்த்து விடமுடியாது. ஆகவே போர் சமூகபயன்பாடு உள்ளதா இல்லாததா என்ற வாதத்தை விடுத்து நாம் இப்போது போரின் சமூகப்பயன்பாட்டை மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள் எவை என்ற விவகாரததுள் செல்வோம்.

போரில் ஈடுபடாத, அல்லது நாட்டங்காணாத பகுதியினர் போரில் ஏற்பட்ட அழிவுகளையே ஒரு அளவுகோலாகக் கருதுகின்றனர். இத்தனை உயிர்கள் மாண்டன, இத்தனை மனிதர்கள அங்கவீனமானார்கள், இத்தனை கட்டிடங்கள் பொடிப்பொடியாகின போன்ற புள்ளிவிபரங்களைத் தொகுத்து எடுத்து அதை வைத்துக்கொணடே போரைப்பற்றிய கணிப்பிறகுவருகிறார்கள். இதுபொதுவாக மனிதாபிமானப் பார்வை என அழைக்கப்படுகினறது. இப் பார்வை உள்ளவர்கள் போர்என்ற நிலைமை தோன்றியவுடன் தடுமாறுகிறார்கள். எந்த முடிவும் எடுக்க முடியாமல் ஊசலாடுகிறார்கள். செயற்படுதன்மை அற்றவர்களாகிறார்கள், எதுவும் செய்யமுடியாத விமர்சகர்களாகவே இருந்து விடுகிறார்கள்.

அழிவுகளின் பருமனை வைத்துக் கொண்டு போரின் சமூகப் பயன்பாட்டை அளவிட முடியாது. போர் எப்போதும் சில சமூக சக்திகளை அடக்குகிறது அல்லது அழிக்கிறது. அதேநேரத்தில் வேறுசில சமூக சகதிகளின் சுதந்திரமான செயற்பாட்டிற்கு வழிவிட்டுக் கொடுக்கிறது. எந்தசக்தி அழிக்கப்பட்டது அல்லது அடக்கப்பட்டது என்பதையும் எந்த சக்திக்கு சுதந்திரமாக செயற்பட வழி திறக்கப்பட்டுள்ளது என்பதையும் வைத்துக்கொண்டே போரின் சமூக பயன்பாட்டை மதிப்பீடு செய்யமுடியும். அதுவே போரின் சமூக பயன்பாட்டை மதிப்பீடு செய்வதற்கான ஒரே அளவுகோலாகும்.

உதாரணத்துடன் விளக்குவோம். 1ம் உலகப்போர் ஐரோப்பிய நாடுகளிடையே நடந்த நாடுபிடிககும் போராகும். உலகவளங்களை தமக்குள் பங்கிட்டுக் கொளவதறகாக நடநத போராகும். இந்தப் போரின் ஒட்டுமொத்த விளைவு ஐரோப்பிய முதலாளிததுவம் பலவீனப்பட்டதேயாகும். இந்த நாடு பிடிக்கும் போரில் பங்குகொள்வதை தவிர்த்துக்கொண்ட ருஷ்யமக்களும், ஐரோப்பிய மக்களும் ஒன்றிணைந்து ருஷ்யாவில் சமதர்மத்தை நிறுவினார்கள். இவ்விதமாக உலகின முதலாவது சோஷலிச நாடு தோற்றமுற்றது. ருஷ்ய மக்கள் நாடு பிடிப்போரை புரட்சியால் எதிர்கொண்டதன் காரணத்தால் சமதர்மத்தை தோற்றுவித்தார்கள். ருஷ்ய மக்கள் நாடு பிடிப்போரை புரட்சிகரப் போரால எதிர்கொண்டிரா விட்டால் அந்தப் போர் எதுவித சமூக பயன்பாடும் அற்ற பேரழிவாக முடிந்திருக்கும். ஆனால் அது சமூக பயன்பாடுள்ள ஒரு போராக உலக அரசியலை முனனோக்கித் தள்ளிய ஒரு போராக மாறியது. இப்போரில் ஐரோப்பிய முதலாளி வர்க்கம் பலவீனப்பட்டது ருஷ்ய தொழிலாளி வர்க்கம் சுதந்திரமாக செயற்படும் வழிவகைகளை ஏற்படுத்திக் கொண்டது.

வியட்னாம் - அமெரிக்க போரில் வியட்னாம் வென்றது. போரின் சமூக பயன்பாடு மனிதகுலத்துக்கு சாதகமானதாகியது.

எமது சொந்த தமிழீழ - சிறீலங்கா போரை எடுத்துக்கொள்வோம். இது நடந்து முடிந்துவிட்ட ஒரு உதாரணமல்ல நடந்து கொண்டிருக்கும் ஒரு நிகழ்வாகும்.

1950 களிலேயே தமிழீழத்திற்கு எதிரான போர் தொடங்கப்பட்டுவிட்டது. ஆனால் தமிழீழம் அவ்வாக்கிரமிப்புப் போரை தற்காப்புப் போரால் எதிர்கொள்ளல் என்பது ஆரம்பமானதோ 1970 களின் பிற்பகுதியிலேயே ஆகும். இக்கால இடைவெளியில் அதாவது சுமார் 25 வருடங்களாக இப்போரின் சமூக பயன்பாடு தமிழீழத்திற்கு தீங்கு பயப்பதாகவே அமைந்திருந்தது. சரணடைவுந் தலைமையும் அண்டிப்பிழைக்கும் போக்குமே ஆதிக்கம் பெற்றிருந்தன. தமிழீழ தேசியம் என்ற எண்ணக்கருவே தோன்றாதிருந்தது. தமிழீழ பொருளாதாரக் கூறுகள் அழிக்கப்பட்டன. தமிழீழ பிரதேசம் மெல்ல மெல்லப் பறிபோனது. தமிழ் இனக்குழும தனித்துவம் கூட இழக்கப்பட்டு வந்தது. இது ஒரு அத்தியாயம்.

தற்காப்புப் பேரால் எதிர்கொள்ளத் தொடங்கிய பின் ஆரம்பமான அடுத்த அத்தியாயத்தில் அழிவுகள் முன்பைவிட பலமடங்கு அதிகரித்தது. ஆனால் போரின் சமூக பயன்பாட்டுத் தன்மையில் ஒரு குணாம்ச மாற்றம் ஏற்பட்டது. தமிழீழ தேசிய உணர்வு பற்றிக் கொண்டது. சரணடைவுத் தலைமைகள் அரசியல் நடைபிணங்களாக்கப்பட்டார்கள். தமிழீழ பிரதேசம் பாதுகாக்கப்படவேண்டும் என்பது மிகநன்றாக புரிந்து கொள்ளப்பட்டது. தமிழீழ தேசிய பொருளாதாரக் கூறுகள் தோற்றம் பெற ஆரம்பித்தன. பெண்களின் சமூக பண்பு புதிய பரிமாணங்களைப் பெறத்தொடங்கியது. இன்னும் பற்பல மாற்றங்கள் ஏற்பட்டன. இவை எல்லாம் போரின் முற்போக்கு சமூக பயன்பாடுகளாகும்.

சமூகத்தின் அடிமட்ட வர்க்கங்கள் படிப்படியாக மேல்நோக்கி வளர்ந்து வரத் தொடங்குகின்றன. இவ் வளர்ச்சி தடையின்றி தொடருமானால்- போரில் தமிழீழம் வெற்றி பெறுமானால் ஒரு சுதந்திரமான, சமதர்ம திசைநோக்கிய ஒரு தேசம் தோன்றும் என்பதில் சந்தேகமேயில்லை.

ஆனால் இப்போரில் தமிழீழம் தோற்குமானால் தமிழீழ தேசிய வளர்ச்சி அடக்கி ஒடுக்கப்பட்டுவிடும், தமிழீழ ஒடுக்கப்பட்ட மக்களும் அடக்கப்படுவார்கள். அப்போது இப்போரின் சமூக பயன்பாடு தீமை பயக்கும் ஒன்றானதாக மாறும் என்பது சந்தேகமில்லை.

ஆகவே ஆக்கிரமிப்பு போரை விடுதலைப் போரால் எதிர் கொள்ளவேண்டும். அப்போது மாத்திரந்தான் ஆக்கிரமிப்புப் போரின் சமூக பயன்பாட்டை பலனுள்ளதொன்றாக மாற்றமுடியும். போரைப் போரால் முகங்கொடுப்பதன் மூலமே போரின் தீய அம்சங்களை நல்ல அம்சங்களாக மாற்றமுடியும். இது போர்வெறியல்ல இதுதான் போர்வெறியை முறிக்கும் மருந்தாகும்.

## ஓவிய வாக்கியம் பதில்

காலை எழுந்தவுடன் 'ரியூசன்'-பின்பு
களைப்புடன் பள்ளிப்படிப்பு.
இல்லம் வந்தவுடன் உணவு - பின்
மாலை முழுவதுமே 'ரியூசன்'
அப்பாவிடம் ஆங்கிலம் படிப்பு
அடுத்தது 'வீட்டு வேலை'
மனனம் செய்வதே வழக்கம்
மாணவ வாழ்வே இயந்திரம்

பரிசுக்குரியவர்:-
செல்வி. மதிவதனி தங்கராஜா
ஆண்டு 10
மெதடிஸ்த பெண்கள்
உயர்தரபாடசாலை
பருத்தித்துறை.

## சாளரம் சிறுகதைப்போட்டி

'சாளரம்' சிறுகதைப் போட்டியொன்றை நடாத்த திட்டமிட்டுள்ளது. சமகால போராட்ட, சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டதாக சிறுகதைகள் அமையவேண்டும்.

தாளில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதப்படவேண்டும். ஒரு தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதுதல் அவசியம். அதே நேரம் எழுத்து விளங்கக் கூடியதாக இருக்கவேண்டும்.

முதலாம் பரிசு 500 ரூபா
இரண்டாம் பரிசு 300 ரூபா
மூன்றாம் பரிசு 200 ரூபா

பரிசுபெற்ற கதைகள் சாளரத்தில் பிரசுரிக்கப்படும். மேலும் நல்ல கதைகளாக தேர்ந்தெடுக்கப்படும் கதைகளும் பிரசுரமாகும்.

போட்டி முடிவு திகதி 25- 03- 1992

# நுண்ணறிவுப் போட்டி

கதவு - 2

காற்றலை - 1

1) ஐ நா. சபைஉட்பட அனைத்து ஐரோப்பிய நாடுகளும் இன்று 'எயிட்ஸ்' நோயை எதிர்த்து பிரச்சாரம் மேற்கொள்கின்றன. இதற்கான காரணம் உலக மக்களில் உள்ள கரிசனை / தமது நாடுகளின் பிரச்சினையை ஒரு உலகப் பிரச்சினையாக்கும் தவறான போக்கு.

2) மாவீரர் தினம் கொண்டாடப்படுவது மாவீரர்களுக்கு ஓர் உயர்ந்த சமூக அந்தஸ்தை ஏற்படுத்துவதற்காக / தியாக உணர்வை மதிக்கும் பண்பை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக.

3) 'பொது அறிவு' என்பது தான் எதுவுமே தெரிந்திராத விடயங்களைப் பற்றிய திகதிகள், பெயர்கள், சம்பவங்கள் போன்றவற்றை மனனம் செய்து வைத்திருத்தல் / தான் வாழும் சூழலைப் பற்றிய புரிந்து கொள்ளல்கள் உடையவர்களாய் இருத்தல்.

4) யேசுக் கிறிஸ்து சிலுவை சுமப்பது தான் செய்யாத குற்றத்திற்காக / மற்றவர்களின் குற்றத்திற்காக.

5) சைவக் கோவில்களில் பூசைகள் நடப்பதோ சமஸ்கிரத மொழியில். ஆனால், தமிழும் சைவமும் நெருங்கிய தொடர்புள்ளதாகவும் கூறப்படுகிறது. இது வரலாற்றின் வெவ்வேறு கட்டங்களின் நிலமையைக் குறிக்கின்றது / தமிழர்களின் மன ஆசையைக் குறிக்கின்றது.

6) தமிழர்களின் மரணச் சடங்குகளில் ஆண்களே முதன்மைப் படுத்தப் படுகிறார்கள். இது ஆண் மேலாதிக்கத்தை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட முறைகளாகும் / பெண் சோகத்தை அடக்கமாட்டாள் என்பதற்காக அவள் விலக்கப்பட்டுள்ளாள்.

7) வெவ்வேறு பாடசாலைகளில் உள்ள சிறந்த மாணவர்களை ஓர் இரு பாடசாலைகளில் சேர்த்து சிறந்த சித்திகளை எடுத்துக் காட்டும் இன்றைய நடைமுறை-திறமைசாலிகளை உருவாக்க அவசியமானதோர் செயலாகும் / பாடசாலைகளின் பரவலான வளர்ச்சியை தடுக்கும் ஒரு செயலாகும்.

8) சிறந்த ஆசிரியருக்கான அளவுகோல் அரசாங்க எழுத்துப் பரிசோதனைகளில் மாணவர்கள் எய்தும் சித்திகள் / மாணவர்களின் பல்வேறுபட்ட திறமைகளையும் வெளிக் கொணர்வதில் பெறப்படும் வெற்றிகள்.

9) ஒரு தனிமனிதனின் சிறப்பான குணாம்சம், பல வேலைகளிலும் ஈடுபட்டு தன்னை விவரந்தெரிந்தவனாக காட்டிக்கொள்ளல் / தனது ஆக்கபூர்வமான பங்கை வகிக்கக் கூடிய வேலைகளில் உறுதியாய் நிற்றல்.

10) தமிழீழம் முழுவதும் ஒரு போர்க்களமாகவும், சாதாரண வாழ்க்கையையே போராட்டமாகவும்மாறிவரும் ஒரு சூழலில் மாணவர்கள் தமது கல்வியில் கரிசனையாக இருந்து பரீட்சையில் சித்தி எய்துதல் அவசியமானது / தாம் மாணவனாக இருக்கும் காலத்திலேயே போராட்டத்தில் பங்கு கொண்டேன் எனப் பெருமைப்பட வாழ்வதே சிறந்தது.

குறிப்பு :- எது சரியோ அதைக் குறிப்பிட்டு இக் கூற்றுக்களை பூர்த்தி செய்யவும். இரண்டுமே தவறென்று நீங்கள் கருதினால் சரியான கூற்றினை நீங்களே எழுதி பூர்த்தி செய்து அனுப்பவும்.

## விபுலானந்தர் நூல் வெளியீடு

திரு. விபுலானந்தர் நூற்றாண்டு விழா தொடர்பாக 'சாளரம்' விபுலானந்தர் குறித்து நூல் ஒன்றை வெளியிடவுள்ளது. நூல் குறிப்பிட்ட அளவே வெளியாகும். எனவே தேவைப்படுவோர் சாளரத்துடன் முன் கூட்டியே தொடர்பு கொள்ளவும்.

## தெறிப்பு

கடந்த நவம்பர் டிசம்பர் சஞ்சிகையைப் பெற்றுக் கொண்டோம். அந்த இதழில் 'ஆசிரியன் மாணவனே' என்ற கட்டுரையை எழுதிய பெ. கணேசன் பாராட்டுக் குரியவர். அவருடைய கருத்துக்கள் சிறந்தவை. ஆனால், தற்கால ஆசிரியர்களில் கணிசமானோர் மாணவனை விடக்குறைந்த, அதாவது, முழுமை இல்லாத நிலையில் தான் உள்ளார்கள். அவர்களுக்குரிய சிறப்புப்பணியின் அவசியத்தை அக்கட்டுரை நனகு உணர்த்தியிருந்தது.

பொருளாதாரத்தடை விதிக்கப்பட்ட இந்தப் போராட்டக்காலகட்டத்தில் அறிவுப்பசிக்குத் தீனி போடுவதற்காக வெவ்வேறு துறைசார்ந்த புத்தகங் களை பெற்றுக்கொள்ள முடியாமல் இருககும் மாண வர்களுக்கு சகல கோணங்களிலும் சிறப்பான ஆக்கங் களைப் பிரசவிக்கும் 'சாளரம' சஞ்சிகையின் இதே பணி சிறந்து தொடர வாழ்த்துகின்றேன்.

செல்வி. டி. அம்பிகை
24, கொழுமபுததுறை வீதி,
சுணடுகுளி.

---

நவம்பர் டிசம்பர் இதழ் படிததேன. வழமையைப் போலவே அனைத்து அமசங்களும குறைவடையாமல் இருந்தன. இமமுறை குறிப்பிடக கூடிய அம்சம் என்ன வென்ில் இதழ் வெளியிட்டு மிக விரைவாகவே எமது கையை வநதடைநதமை. தேவையுணர்ந்து செய்யும் தங்களின் செயற்பாட்டிற்கு என் சார்பிலும என் நண பர்கள் சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன.

நா. நந்தகுமார்
146, ஸகந்தபுரம்,
கிளிநொசசி.

---

சாளரத்தில வெளியாகும கட்டுரைகளையும், கதை களையும், கவிதைகளையும படிதது ஒவ்வொரு முறை யும் மகிழ்ச்சயடைகிறேன். தொடாநது சாளரத்தை எமது பாடசாலைக்கு அனுப்பிவைக்குமாறு கேடடுக் கொள்கிறேன்.

யா. றொ. சதிஸ்குமார்,
ஆண்டு 4 D,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழபபாணம.

---

சாளரத்தின் மூலம் மாணவர் மட்டுமென்றி ஏனை யோரும் பலனடைகின்றனர். இன்றைய போராட்ட காலத்தில் வாழும் வழிகளையும், அனைவரினது கட மைகளையும் கவிதை, கட்டுரைகள் மூலம் அறியப் பெறுகிறோம்.

ம. மிரியம் ஜொஷானி
ஆண்டு 10
திருக்குடும்பக் கன்னியர்மடம்
யாழ்ப்பாணம்.

---

சாளரத்திற்கு நாம் அனுப்பும் ஆக்கங்களில் பிழை யிருப்பின் அதனைத்திருத்தி அனுப்புமாறு தாழ்மையுடன் வேண்டுகிறேன். ஏனெனில் இதனால் எமது ஆக்கங் கள் மென்மேலும் சிறந்த முறையில் வளர்ச்சியுற ஏது வாகும் என எதிர்பார்க்கிறேன்.

க. பேணடெற்கல்பனா
ஆண்டு 13 கலைப்பிரிவு,
யா/ கன்னியர்மடம் ம. வி.
யாழ்ப்பாணம்.

---

சாளரம் சஞ்சிகையை எமது பாடசாலையில் பல மாணவர்கள் படித்துவருகிறார்கள். 'சாளர'த்தைத் திறப் பதன் மூலம் எமது மனச்சாளரமும் திறந்து கொள்கிறது. தங்கு தடையின்றிப் பாயும் நதியைப்போல சாளரத் தைத் தொடர்ந்து வெளியிடவும்.

து. கணேந்திரன்
ஆண்டு 10
யா / மட்டுவில் சரஸ்வதி
கனிட்ட வித்தியாலயம்.

---

கடந்த இதழில் வெளியான மானம் காத்தவீரபாண் டிய கட்டபொம்மன் கட்டுரையைப் படித்தேன். இவ்வாறு தொடர்ந்து பண்டாரவன்னியன், இராஜராஜசோழன் போன்ற பண்டைய மன்னர்களின் வரலாற்றினைச் சுருக் கமாக தந்தால் என் போன்ற பெரும்பாலான மாணவ, மாணவிகள் படித்து அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். 'சாளரம்' பின்தங்கிய பிரதேசங்களுக்கும் வருவது குறித்து மகிழ்ச்சி

இ. சுரேஸ்
நாச்சிக்குடா,
முழங்காவில்,

---

வன்னிப் பகுதிகளுக்கு 'சாளரம்' சஞ்சிகை வருவது குறித்து நன்றி; மகிழ்ச்சி. வன்னிப்பகுதியில் நிலவும் பிரச்சினைகளையும் (குறிப்பாக கல்வி சம்பந்தப்பட் டவை) சாளரத்தில் வெளியிடவும். எல்லா சஞ்சிகைக ளும் யாழ் குடா நாட்டில் நிலவும் விடயங்களுக்கு மட் டுமே முக்கியத்துவம் கொடுப்பதாக ஒரு கருத்து நில வுகிறது. தயவுசெய்து இதனைக் கவனத்தில் எடுக் கவும்.

மா. சாரதா
முல்லைததீவு.

---

❀ 'சாளரம்' நிச்சயமாக எல்லாப் பிராந்தியங்களுக் கும் முக்கியத்துவ ம் அளிக்கும். வன்னிப்பகுதி விடயங் களை எமக்கு எவ்வளவுக் கெவ்வளவு எழுதியனுப்பு கிறீர்களோ அவற்றை எம்மால் முடிந்த அளவு பிரசுரிப் போம். எனவே எழுதுங்கள், எழுதியனுப்புங்கள்.

கதவு 2 காற்றலை 1

# மனித உரிமைகளை முறையாகப் பேணுவோம்

1991ம் ஆண்டின் மார்கழிமாதம் உலக மனித உரிமைகள் தினம் உலகெங்கும் நினைவு கூரப்பட்டது.

மனித உரிமைகளில் பிரதானமானதும் முதன்மையானதும் உயிர்வாழும் உரிமையாகும். இராணுவ நடவடிக்கைகளினால் மரணம், பொருளாதாரத் தடைகளினால் மரணம் என்ற நிலையைப் போக்காது மனித உரிமைகள் பற்றிப் பேசுவதே அர்த்தமற்றது. இவ்விதமான மரணங்களுக்கு காரணமாய் இருக்கும் அரசாங்கங்கள் மனித உரிமைகள் பற்றிப் பேசவே அருகதையற்றவைகளாகும். சிறிலங்கா அரசாங்கமும் இவற்றில் ஒன்று.

உயிர்வாழ்வதற்கான உணவு, உடை, உறையுள் ஆகியவை கிடைத்து விட்டால் மட்டும் மனித உரிமைகள் முழுமை பெற்றுவிடமாட்டாது. வளர்ப்புப் பிராணிகளான கால்நடைகள் கூட இவற்றைப் பெறுகின்றன தான். ஆனாலும் அவற்றிற்கு சுதந்திரமில்லை.

மனித உரிமையின் அடுத்த கூறு அரசியல் உரிமையாகும். மனித உரிமை என்பது தனிநபர்களின் உரிமை மட்டுமல்ல. அது மனிதனின் வெவ்வேறு குழுமங்கள் தொடர்பானவையுமாகும். ஒரு "தேசம் தனது தலைவிதியை தானே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையும் மனித உரிமைதான். இந்த உரிமை இல்லாத பல தேசங்களில் தமிழீழமும் ஒன்று.

அரசியல் உரிமை என்பது வெவ்வேறு குழுமங்களை மட்டும் சார்ந்ததல்ல. தேசத்தின் சுதந்திரம் மக்களின் சுதந்திரமாகவும் வேண்டும். சுதந்திரமான அமெரிக்காவில் மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நீக்ரோக்கள் வாழ்கிறார்கள். இவ்வித நிலை எமக்கு வேண்டாம்.

நிற, மத. மொழி, இன, பால், சாதி போன்ற பேதங்களின்றி அனைவருக்கும் சமமான அரசியல்உரிமை இருக்கவேண்டும். தேசத்தின் பொதுவான மத்தியத்துவப் படுத்தல்களுக்கு உட்பட்டு அத்தேசத்தின் ஒவ்வொரு தனிநபரும் அரசியல் உரிமை உள்ளவனாக இருக்கவேண்டும். இப் பொதுவான மத்தியத்துவப் படுத்தல் ஒருகட்டாய திணிப்பாக இருக்கக்கூடாது.

மனித உரிமை தொடர்பான மற்றைய கூறுகள் பொருளாதார உரிமை. பண்பாட்டு உரிமை, சமுகஉரிமை ஆகியனவாகும். ஒருவன் ஏழையாகவும் ஒருவன் பணக்காரனாகவும் வாழும் சமுதாயத்தில் மனித உரிமைகள் எப்படி நிலவமுடியும்.

"மனித உரிமை தேசிய சுயாதிபத்தியத்திற்கு அப்பாற்பட்டது." "மனிதஉரிமைகள் அரசு எல்லைகள் பற்றி எதுவும் கண்டுகொள்ளாது" போன்ற ஏகாதிபத்திய வாதங்கள் நிராகரிக்கப்பட வேண்டும். இது மனித உரிமைகளின் பேரால் சில தேசங்கள் மேலாதிக்கம் பெற மேற்கொள்ளும் தத்துவமேயாகும்.

ஹிந்தி-இந்து இந்திய மத்தியரசு "மனித உரிமைகள் அரசு எல்லைகள் பற்றி எதுவும் கண்டு கொள்ளாது" என்று கூறி பங்களாதேசை தோற்றுவித்தது. அதே அரசு தமிழீழத்தின் மேல் தனது முடிவைத் திணித்தது. ஆனால் காஷ்மீர் பிரச்சினையில் பாக்கிஸ்தான் ஏதாவது கூறினால் அது உள்நாட்டு பிரச்சினையில் தலையிடுவதாகிறதாம். தமிழன் என்ற காரணத்திற்காக தமிழ் நாட்டு மக்கள் நீட்டும் நேசக்கரத்தை தமிழீழ மக்கள் பற்றிக் கொண்டால் அது உள்நாட்டு பிரச்சினையில் தலையிடுவதாகிறதாம்.

ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் தமது ஆரம்பகாலங்களில் மனிதநாகரிகத்தை பேணுவதற்காக ஆசிய, ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளின் மேல் படை எடுத்தன, அம் மக்களையும் அந்நாடுகளையும் சிறைப் பிடித்தன. இன்று மனித உரிமைகளின் பெயரால் வல்லரசுவாதமும், மேலாதிக்கவாதமும் தமது ஆதிக்கத்தை வளர்க்க முற்படுகின்றன.

இவ்வாதிக்க நாடுகள் தமது சொந்தநாட்டில் நிலவும் ஏராளமான மனித உரிமை மீறல்களை மூடிமறைப்பதற்கும் இந்த நிலையை ப்யன்படுத்திக் கொள்கின்றன.

கள்ளனைப்பிடி கள்ளனைப்பிடி என்று கத்திக் கொண்டே கள்ளன் தப்பிக்கொள்வதைப் போன்றதே இதுவாகும்.

# செய்திப் பதிவுகள்

1- 12- 91

தமிழீழ காவல் துறையின் யாழ். நகரப்பணிமனை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திர ராசா அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. பொலிகண்டியில் நள்ளிரவில் விமானம் குண்டு வீசியது. மூன்று வீடுகள் சேதமடைந்தன. பெண்ணொருவர் படுகாயமுற்றார்.

3- 12- 91

மன்னார் மாவட்டம் சிலாவத்துறையில் சிறீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும், சுமார் ஏழு மணித்தியாலங்கள் கடும் மோதல்கள் நடைபெற்றன. பரவலாக விமான குண்டுவீச்சுக்களும் இடம்பெற்றன.

5- 12- 91

வடமராட்சியில் பொலிகண்டி, ஊரிக்காடு பகுதிகளில் சிறீலங்கா விமானப்படை அகோர குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடாத்தின. பொதுமக்கள் இருவர் காயமுற்றனர். ஐந்து வீடுகளும் ஒரு மருத்துவமனையும் சேதமானது.

7- 12- 91

பலாலியில் இருந்து முன்னேற முயற்சி எடுத்த சிறீலங்கா இராணுவத்தினருக்கும் இடைக்காடு, வளலாய் பகுதிகளில் கடும்சண்டை நடந்தது. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தனர். விமானத் தாக்குதல்களினால் ஆறு பொது மக்கள் பலியாகினர். உடுப்பிட்டியில் நடந்த விமானக்குண்டு வீச்சினால் ஒருவர் உடல் சிதறி மரணமானார். பலகட்டடங்கள் சேதமுற்றன.

8- 12- 91

விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா இராணுவத்தினருக்கும் பலாலி இராணுவ முகாமைச்சூழவுள்ள மும்முனைகளில்மோதல்கள் நடைபெற்றன. விமானத்தாக்குதல்கள் கடுமையாக இருந்தன. இடைக்காடு, குப்பிளான், வளலாய் பகுதிகளில் மோதல்கள் நடந்தன.கீரிமலைப்பகுதியிலும்மோதல் இடம்பெற்றது.

9- 12- 91

அமைச்சர் தொண்டமான் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிய கடிதம் செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளினால் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. ஜனவரி மாதம் தாம் யாழ் வருவதாக திரு. தொண்டமான் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

பலாலிப்பகுதியில் மூன்றுநாட்களாக இடம் பெற்ற மோதல்கள் சற்றுத்தணிந்தது. பலாலிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பூர்த்தியானதாக கூட்டுப்படை அலுவலகம் அறிவித்தது.

10- 12 - 91

திருமலையில் விமானப் படையினர்மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல்களை நிகழ்த்தினர். இதில் நான்குபடையினர் கொல்லப்பட்டதோடு ஆயுததளபாடங்களும் கைப்பற்றப்பட்டன.

14 - 12 91

சிறீலங்கா இராணுவத்திற்கென சிலியிலிருந்து ஏற்றுமதியான பெருமளவு ரொக்கட்டுகள், இயந்திரத்துப்பாக்கிகள், மற்றும், ஆயுதங்கள் யூகோஸ்லேவியாவிற்குளடுத்துச் செல்லப்படும் வழியில் பிடிபட்டன. அவை ஹங்கேரியில் வைத்து பறிமுதல் செய்யப்பட்டன.

அமைச்சர் தொண்டமானின் புதிய சமரசத் திட்டங்களடங்கிய கடிதம் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

21- 12- 91

ஆறாவது 'சார்க்' உச்சிமாநாடு கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டுமண்டபத்தில் நடைபெற்றது. தென்னாசியப் பிராந்தியத்திலிருந்து 'பயங்கரவாதம்' ஒழித்துக்கட்டப்படவேண்டுமென 'சார்க்' தலைவர்கள் பிரகடனம் செய்தனர்.

24- 12- 91

கொக்குத்தொடுவாயில் சிறீலங்கா இராணுவத்தினரின் இரண்டு படையணிகள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடாத்தியதில் இருபத்தைந்திற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர். பெருமளவு ஆயுதம் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

25- 12- 91

சோவியத் யூனியனின் இறுதி ஜனாதிபதியான மிகெயில் கொர்பச்சேவ் தனது பதவியை ராஜினாமாச் செய்தார்.

27- 12- 91

அமைச்சர் தொண்டமான் தயாரித்துள்ள புதிய யோசனைகள் குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர்கள் விசேட பொதுக்கூட்டம் ஒன்று கூடி ஆராய்ந்தார்கள்.

29- 12- 91

யாழ். கடல் நீரேரியில் ஒரு கடற்படைப் படகை கடற்புலிகள் வழிமறித்துத் தகர்த்தனர். இதனால், ஏழு படையினர் கொல்லப்பட்டனர். படகு சிதறி மூழ்கியது. ஏனைய படகுகள் தப்பிச் சென்றன.

பல்கட்டுதல்,
கண் பரிசோதனை செய்து
கண்ணாடி வழங்குதல்
ஆகியவற்றில்
நிபுணத்துவம் பெற்றவர்கள்

# மொறாய்ஸ்

50, மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் தியேட்டர் முன்பாக)
யாழ்ப்பாணம்.

# அறிவகம் புத்தகசாலை

பாடசாலைப் புத்தகங்கள்
உபகரணங்கள்
விற்பனையாளர்கள்

# அறிவகம் புத்தகசாலை

தட்டச்சு, றோணியோ
வேலைகள் குறித்த நேரத்தில்
செய்து கொடுப்பவர்கள்

# அறிவகம் புத்தகசாலை

இல: 374 மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

# ஓவியம் வாக்கியம்



குடிவெறியால் ஏற்பட்ட குழப்பமா
வேலிச்சண்டையால் உண்டான 'வெட்டுக் கொத்தா'
என்னவென்று தெரியவில்லை.
நாட்டின் எல்லையில் நின்று இளையோர் பலர் எதிரிகளுடன் போர்புரிய
இவர்கள்-
காணி எல்லைப் பிரச்சினைக்காக கத்தியுடன் நிற்கிறார்களா?
கற்பனை செய்யுங்கள்
கவிதை வரிகளால் இவர்களுக்கு அடிகொடுங்கள்.